வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 18.07.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 221 | பக்கங்கள் : 16

### இந்தியாவுக்கு வரும் ஜனாதிபதியிடம்

# மாகாண சபைகள் தேர்தலை விரைந்து நடத்த வலியுறுத்துக

## வடக்கு, கிழக்கு சிவில் சமூக உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம்



**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**“பெரும்பான்மையான மக்கள் மாகாண மட்டத்திலான ஒரு தமிழ் நிர்வாகத்தை அவசரமாக வேண்டி நிற்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் தமிழ் மாகாணங்களில் மாகாண சபைகள் செயல்படவும் இடையறாது இந்தியா வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில், இந்தியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த வலியுறுத்த வேண்டும் என்று அழுத்தமாக தெரிவிக்க வேண்டும்.”**

- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சிவில் சமூக உறுப்பினர்கள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியப் பிரதமருக்கான இந்தக் கடிதத்தை வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் சென்ற குழுவினர் தூதரக அதிகாரி ராம் மகேஷிடம் கையளித்தனர்.

அந்தக் கடிதத்தின் முழுவிவரம் 15



## இரு குழுக்களின் மோதலால் நாவாந்துறையில் பதற்றம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

நாவாந்துறையில் இரண்டு குழுக்கள் நேற்றிரவு மோதலில் ஈடுபட்டன. இதனால், அங்கு பதற்ற நிலை நீடித்தது.

இந்த மோதல் குறித்து யாழ்ப்பாணம் பிரதேச செய லர் எஸ். சுதர்சனுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விசேட அதிரடிப் படையினர் 15

## ஜனாதிபதி தாராளவாத கொள்கை மக்களுக்கு பயனளிக்க வேண்டும்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு,ஜூலை 18

ஓர் ஆசனத்துடன் பாராளுமன்றம் வந்த அரசியல் கட்சி அடுத்த தேர்தலில் ஆசனங்களை அதிகரிக்க முயற்சிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய தாராளவாத கொள்கை நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுடையதாக அமைய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இறக்குவானையில் இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் கட்சிகள் தேர்தல்கள் குறித்து தற்போது 15

## ஜனநாயகத்தை அழிப்பதற்கான அரசின் சதியை முறியடிப்போம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

கொழும்பு, ஜூலை 18

ஜனநாயகத்தை அழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் கூட்டு சதி முயற்சிகள் அனைத்தையும் முறியடிக்க நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று விடுத்துள்ள விசேட காணொலியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உண்மையில், இந்த அரசாங்கம் அதன் நடவடிக்கைகளின் மூலம் மக்களின் இறையாண்மை, சர்வஜன வாக்குரிமை என்பன மக்களுக்கு மறுக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை 15

# ஆட்சி அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டும்!

### இந்தியப் பிரதமருக்கு சம்பந்தன் கடிதம்



**கொழும்பு, ஜூலை 18**

**தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இந்தியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தவேண்டும் என்று தமிழரசு கட்சியின் பெரும் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியப் பிரதமரை கடிதம் மூலம் கோரியுள்ளார்.** 15

## தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து 71 விகாரைகள் கட்டப்பட்டுள்ளன

### கனடா தூதுவருக்கு சிறீதரன் விவரண அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து - புதிதாக 71 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தன்னை சந்தித்த கனடா உயர்ஸ்தானிகரிடம் கூறிய சி. சிறீதரன் எம். பி. அது தொடர்பான விவரண அறிக்கையையும் அவரிடம் வழங்கியுள்ளார்.

இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று சிறீதரன் எம். பியை அவரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, போருக்கு பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374. 8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரம், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு 15

## அனைத்து விடயங்களுக்கும் சர்வதேசத்தை அழைக்காதீர்கள்!

### தமிழ் கட்சிகளுக்கு கூறிய அமெ. தூதுவர்



கொழும்பு, ஜூலை 18

அனைத்து விடயங்களுக்கும் சர்வதேசம் தலையிட வேண்டும் என்று கூறாதீர்கள். சர்வதேச நாடுகளுக்கும் சில வரையறைகள் உண்டு என்று தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களிடம் இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். 15

# குருந்தூரில் வழிபாட்டுரிமை மறுப்பு மனித உரிமை குழுவில் முறைப்பாடு!

வவுனியா, ஜூலை 18

குருந்தூர்மலையில் கடந்த வெள்ளிக்கிழமை சைவர்களுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை செய்தியாளர்கள் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயல்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் ஆகியோர் வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய பணிமனையில் செய்தனர்.

குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள சென்றபோது பெரும்பான்மை இனத்தவர்களாலும் மற்றும் பௌத்த துறவிகளாலும் குழப்பம் விளைவிக்கப்பட்டதுடன், பொங்கலுக்காக அங்கு தீ மூட்டப்பட்டபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலும் பெரும்பான்மை இனத்தவர் ஒருவராலும் சப்பாத்து கால்களால் மிதிக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

அத்தோடு வழிபாடுகளை மேற்கொள்ள வருகைதந்த சைவத் தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும், சமூக செயல்பாட்டாளர்களும் பொலிஸாரால் தாக்கப்பட்டுமிருந்தனர். இதன்போது, செய்தியாளர்களும் அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

இவற்றில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது. (ஐ)

# 90 ஆயிரம் வீடுகளுக்கு நீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, ஜூலை 18

நீர்கட்டணம் செலுத்தத் தவறிய 90 ஆயிரம் பாவனையாளர்களுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது

இந்த வருடம் மே மாத நிலவரப்படி சுமார் 800 கோடி ரூபாய் தண்ணீர் கட்டண நிலுவையாக உள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது. மொத்த தண்ணீர் கட்டண தொகையில் 710 கோடி ரூபாய் நிலுவை, வீட்டு நீர் விநியோக பாவனையாளர்களால் செலுத்தப்படாமல் உள்ளது.

மத வழிபாட்டுத் தலங்களில் 3.2 கோடி ரூபாயும், பொது நீர் விநியோகத்தில் 26. 2 கோடி ரூபாயும், தொழிற்சாலைகளில் 1.5 கோடி ரூபாயும் மற்றும் அரச நிறுவனங்களில் 65. 6 கோடி ரூபாயும் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிதி நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 90 ஆயிரத்து 617 பாவனையாளர்களின் நீர் விநியோகத்தை துண்டித்துள்ளதுடன், 5 ஆயிரத்து 277 நுகர்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ஐ)



# வேலணை மத்திய கல்லூரி முன்பாக நேற்று போராட்டம்

## அதிபர் நியமனத்தை எதிர்த்து

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் வேலணை மத்திய கல்லூரிக்கு கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த ஒருவரை அதிபராக நியமிப்பதற்கு எதிராக நேற்று முற்பகல் 11 மணியளவில் பாடசாலைக்கு முன் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை வளாகத்தினுள் காணப்பட்டார்.

நேற்று முற்பகல் வேலணை மத்திய கல்லூரிக்கு முன்பாக கூடிய சுமார் 70இற்கும் மேற்பட்டோர் புதிய அதிபர் நியமனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆளுநருக்கு அனுப்பவுள்ள மகஜருக்கான கையெழுத்தும் அங்கு பெறப்பட்டது. (அ)

# யானைகள் அட்டகாசத்தால் வாழ்வாதாரங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 18

கண்டவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகள் பகுதியில் உட்புகுந்து வாழ்வாதாரத்தை அளித்து வருவதுடன் மக்களின் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தி வருவதாகவும் இது

தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எந்தவித உரிய நடவடிக்



கையும் எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனால் இரவு வேளைகளில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் எனப் பலரும் நித்திரையின்றி நிம்மதியின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள்

உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (அ)

# பருத்தித்துறை துறைமுக பகுதியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சி - பருத்தித்துறை துறைமுக கடற்பகுதியில் அடை யாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

பருத்தித்துறை துறைமுக இறங்கு தளத்துடன் கரையொதுங்கியவாறு ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை காணப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-2)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்று கொண்டாடப்பட்டபோது வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவியர் நடன ஆற்றுகை வழங்கியபோது...!

# அரசை பலவீனப்படுத்துவதற்கு அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பு

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தியதை போன்று தற்போதைய அரசாங்கத்தையும் பலவீனப்படுத்த ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். இதற்கு அரச அதிகாரிகளில் ஒரு சிலரும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று தொகுதி அமைப்பாளர்களிடையே பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன பலமானது. 2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற சகல தேசிய தேர்தல்களிலும் அமோக வெற்றிப் பெற்றோம். கட்சி பலமானது ஆனால், நாம் தெரிவு செய்த அரச தலைவர் சிறந்த முறையில் செயல்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் இராச்சியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பரவலாக இடம்பெற்றது. இந்த சம்பவம் அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கவில்லை. ஆகவே, இவ்வாறான ஒருசில சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தியதை போன்று தற்போதைய அரசாங்கத்தையும் பலவீனப்படுத்த ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். அதற்கு ஒரு சில அரச சேவையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்து தரம் தொடர்பில் தற்போது பெரும் பிரச்னை தோற்றம் பெற்றுள்ளது. கடந்த கால சூழ்ச்சிகள் தற்போது செயல்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே, இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

# மோ.சைக்கிள்களில் தெருவில் வித்தை காட்டிய 16 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 18

அதிவேகமாக - வித்தை காட்டியபடி மோட்டார் சைக்கிள்களை செலுத்திய 16 இளைஞர்களை கைது செய்த பொலிஸார், அவர்களின் மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்தனர்.

கடுவலை பொலிஸ் பிரிவில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களை அதிவேகமாக ஓட்டிச் சென்றதுடன், சிலர் ஒற்றைச் சக்கரத்துடன், தலைக் கவசம் அணியாமல் சென்றனர் என்று முறையிடப்பட்டது.

பொலிஸாரின் அறிவுறுத் தலைப் புறக்கணித்த அந்த இளைஞர்கள் வேகமாகச் சென்றதுடன், அதிகாரிகள் அவர்களைத் துரத்திச் சென்று பிடித்து 16 மோட்டார் சைக்கிள்களைக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 26 வயதுக்குட்பட்ட வெல்லம்பிட்டிய, முல்லேரியா, அங்கொடை, மாலபே மற்றும் களனிமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

Eelanadu
18.07.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவின் தலையீடு

தமிழர் பிரச்னையில் அமெரிக்கா பார்வையாளராக இருக்கக் கூடாதென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். அண்மையில், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அமெரிக்கா தொடர்பில் தமிழ் சூழலில் அவ்வப்போது பேசப்படுவதுண்டு. அண்மையில், உலகத் தமிழர் பேரவையின் தலைமையில் புலம்பெயர் பிரதிநிதிகள் சிலர் வாஷிங்டனில் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜதந்திரிகளை சந்தித்திருந்தனர். அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் அழுத்தங்களை பிரயோகிக்குமென்று வாக்குறுதியளித்ததாக சந்திப்பில் பங்குகொண்டவர்கள் கூறியிருந்தனர். இதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர் ஏம். ஏ. சுமந்திரன் தலைமையிலான மூவர் அடங்கிய குழு ஒன்றும் அமெரிக்கா சென்றிருந்தது. நாடு திரும்பிய சுமந்திரன் அமெரிக்கா கடுமையான சில நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகக் கூறியிருந்தார். ஆனால், அவர் கூறியவாறு எதுவும் நடக்கவில்லை.

அமெரிக்கா இலங்கை விடயத்தில் பார்வையாளராகவும் இருக்கவில்லை பங்காளராகவும் இருக்கவில்லை. ஓர் உலக சக்தியென்னும் வகையில் அமெரிக்காவின் நீண்டகால நலன்களின் அடிப்படையில் அமெரிக்கா அதன் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அண்மையில், அமெரிக்காவுக்கும் - இலங்கைக்குமான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு கொழும்பில் கொண்டாடப்பட்டது. ஒரு நட்புநாடு என்னும் வகையில் இலங்கையின் நலன்களில் அமெரிக்கா அதன் எல்லைக்கு உட்பட்டு ஈடுபாடு காட்டிவருகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி மற்றும் இராணுவ தளபாட உதவிகளை அமெரிக்கா வழங்கி வந்திருக்கின்றது. உலகளாவிய பயங்கரவாதத்தை தடுப்பதென்னும் அடிப்படையிலேயே அமெரிக்காவின் உதவிகள் அமைந்திருந்தன. 1997ஆம் ஆண்டு அமெரிக்கா விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக தடைசெய்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் பெரியளவில் நன்மை பெற்றது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னணியில் - விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போதான மனித உரிமைகள் மீறல், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகித்து வருகின்றது. இந்த பின்புலத்தில்தான் 2012இல் இலங்கையின் மீதான முதலாவது பொறுப்புக் கூறல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அப்போதைய ஒபாமா நிர்வாகத்தின் முயற்சியாலேயே அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்காவின் அணுகுமுறையை நோக்கினால் ஒரு விடயத்தை காணலாம். அதாவது, அமெரிக்காவின் அணுகுமுறை இலங்கையை மையப்படுத்தியதே தவிர தமிழ் மக்களை பிரத்தியேகமாகக் கொண்டதல்ல. இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், நல்லாட்சியை ஊக்குவித்தல் என்னும் அடிப்படையில்தான் அமெரிக்காவின் ஈடுபாடு அமைந்திருக்கின்றது. இந்த நிலையில், அமெரிக்கா தமிழர் பிரச்னையில் பார்வையாளராக இருக்கக்கூடாது என்றால் - இந்தியா போன்று தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையில் அமெரிக்காவும் நேரடியாக தலையீடு செய்ய வேண்டும். தமிழர்களுக்காக பிரத்தியேகமாக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். ஆனால், உலகம் அதிகம் பிராந்தியமயப்பட்டு வரும் சூழலில் அவ்வாறான தலையீட்டுக்கான வாய்ப்பில்லை. சம்பந்தன் இந்த விடயங்களை அறிந்து பேசுகின்றாரா அல்லது விடயங்களை அறிய முடியாத கையறுநிலையில் பேசுகின்றாரா?

பொதுவாக தமிழ் அரசியல் தரப்புகள் தங்களின் கற்பனைகளையே இராஜதந்திரமாக முன்வைப்பதுண்டு. அமரிக்கா தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கும் கருத்துகளே இதற்கு சிறந்த உதாரணமாகும். அமெரிக்கா போன்ற உலக சக்திகள் நீண்டகால அடிப்படையில்தான் விடயங்களைக் கையாளும். ஒரு நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் கூட்டத்தில் பலம்பொருந்திய சக்திகள் பந்தயம் கட்டாது. பெரும்பான்மையை கையாளவே முடியாதவோர் இக்கட்டான சூழலில்தான் ஏனைய மக்கள் கூட்டங்கள்மீது அவர்கள் பார்வை படும். அமெரிக்காவை பொறுத்தவரையில் அவ்வாறான சூழல் இதுவரையில் இலங்கைத் தீவில் ஏற்படவில்லை.

# கனேடிய தூதுவரை சந்தித்தார் சிறீதரன்



*யாழ்ப்பாணம், ஜூலை 18*

*இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ்க்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று பாராளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றது.*

*இச்சந்திப்பின் ஆரம்பத்தில், ஈழத்தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டார்.*

*இதன்போது இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கனேடிய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் நடத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய தூது வர் நினைவு கூர்ந்திருந் தார்.*

*ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்டுதல், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றின் காலத் தேவை, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் சமஷ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13ஆவது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா, அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஷ்டி முறைமையை அடிப்படையாகக் கொண்டு அதிலும் குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஷ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள், 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கத்தக்கதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண அரசுக்கு வழங்கப்பட்டிருந்தும்கூட, வடக்கு - கிழக்கின் 80வீதமான நிலங்கள் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், கனிய வளத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றால் தொடர்ச்சியாக பறிக்கப்படுகின்றமை, இன, மத, மொழி ரீதியான வலிந்த ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.*

*இவைதவிர இலங்கையில், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் பெண்களின் அரசியல் வகிபாகம் மிகக்குறைந்தளவில் காணப்படுவதன் காரணம் குறித்தும், அதன் யதார்த்தநிலைப் பின்னணிகள், குடும்ப மற்றும் சமூகச் சூழல் என் பவை குறித்தும் கனேடிய உயர்ஸ்தானிகர், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் கேட்டறிந்து கொண்டார். (அ)*

## *மாணவி தாக்கப்பட்ட விவகாரம்:*

# விசாரிக்கச் சென்ற கல்வி அதிகாரிகள்மீது தாக்குதல்

*யாழ்ப்பாணம், ஜூலை 18*

*அதிபரால் மாணவி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்த குறித்த பாடசாலைக்கு சென்ற கல்வி அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.*


*மண்கும்பான் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கடந்த புதன்கிழமை தரம் 4இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை பாடசாலை அதிபர் தாக்கினார் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டது.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இந் நிலையில்,*

*நேற்று காலை தீவக கோட்டக் கல்வி அதிகாரிகள் சிலர் விசாரணைகளை மேற்கொள்ள பாடசாலைக்கு சென்றிருந்த நிலையில் அங்கு கூடி இருந்த சில மாணவர்களின் பெற்றோர் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிய வருகின்றது.*

*சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜுலை - 18 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 02**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | சூன்ய |




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சகஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

**சிம்மம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**கன்னி**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மன இறுக்கம் வந்து நீங்கும். விமர்சனம் கண்டு அஞ்சாதீர்கள். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாறறிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. . அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அதிர்ஷடம் உண்டாகும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வவியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# எதிர்க்கட்சிகள் கூட்டத்தை பொறுக்கமுடியாது வருவாய் துறையை பா. ஜ. க. ஏவி வருகின்றது

## தி. மு. க. கட்சி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 18

எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பொறுத்துக்கொள்ள முடியாமல் வருவாய் துறையை பா. ஜ. க. ஏவி வருகிறது என்று தி. மு. க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி குற்றம்சாட்டினார்.

தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நேற்று வருவாய் துறையினர் சோதனை நடத்தினர்.

இந்நிலையில், சோதனை நடைபெறும் சைதாப்பேட்டை வீட்டுக்கு வருகை தந்த தி. மு. க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது,

"முதல்வர் தனது பிறந்த நாள் விழாவில், யார் பிரதமராக வர வேண்டும் என்பதைவிட, யார் வரக் கூடாது என்பதுதான் முக்கியம் என்று பேசினார். அதன் பிறகு தொடர்ந்து மத்திய அரசு, ஆளுநர் மூலமாக சில நெருக்கடிகளையும், தற்போது வருவாய் துறை மூலமாக நெருக்கடிகளையும் தந்து கொண்டுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் பாட்னா கூட்டத்தில் கலந்து கொண்ட போது செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை நடைபெற்றது. தற்போது பெங்களூர் கூட்டத்தின் கவனத்தை திசை திருப்பவே பொன்முடி வீட்டில் வருவாய் துறையினர் சோதனை செய்கிறார்கள். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல் வருவாய் துறையை பா. ஜ. க. ஏவி வருகிறது - என்றார்.

(ஐ)

# வருவாய்த்துறை சோதனை; கிஞ்சித்தும் கவலையில்லை

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 18

வருவாய் துறை சோதனை குறித்து தி. மு. க. கிஞ்சித்தும் கவலைப்படவில்லை என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் இரு நாள் ஆலோசனை கூட்டம் பெங்களூரில் நேற்று தொடங்கியது. 24இற்கும் மேற்பட்ட கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ள இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று விமானம் மூலம் சென்னையில் இருந்து பெங்களூர் புறப்பட்டு சென்றார். முன்னதாக செய்தியாளர்களைச் சந்தித்த அவர்,

"மத்தியில் ஆட்சி பொறுப்பில் உள்ள பாஜகவை வீழ்த்த வேண்டும் என்று என்பதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு எதிர்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஏற்கனவே பீஹார் மாநிலம் பாட்னாவில் எதிர்க்கட்சி தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. தற்போது இருநாள் கூட்டம் நடைபெறுகிறது.

பா. ஜ. கவை வீழ்த்த பீஹார், கர்நாடகா என தொடர்ந்து கூட்டப்படக் கூடிய கூட்டம், பா. ஜ. க ஆட்சிக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதன் வெளிபாடுதான், வருவாய்த்துறை அவர்களால் ஏவப்படப்பட்டுள்ளது. ஏற்கனவே, வட மாநிலத்தில் இந்த பணியை செய்து கொண்டு இருந்தவர்கள், தற்போது தமிழகத்திலும் இந்த பணியை தொடங்கி உள்ளார்கள்.

வருவாய்த்துறை சோதனை குறித்து தி. மு. க. கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. உயர் கல்வி துறை அமைச்சர் பொன்முடி வீட்டில், வருவாய்த்துறை சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வழக்கு ஜெயலலிதா முதல்வராக இருந்த போது, புனையப்பட்ட பொய் வழக்கு. 13 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட வழக்கு. 10 ஆண்டுகால அதிமுக ஆட்சி நடைபெற்றபோது, இந்த வழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

அண்மையில் பொன்முடி மீது கடந்த கால ஆட்சியில் சுமத்தப்பட்ட 2 வழக்குகளில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதை வழக்கை சட்ட ரீதியாக அவர் எதிர்கொள்வார். இதற்கெல்லாம் பாராளுமன்ற தேர்தலில் பதில் அளிக்க மக்கள் தயாராக உள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தின் நோக்கத்தை திசை திருப்ப பா. ஜ. க. செய்து கொண்டு இருக்கும் தந்திரம்தான் இது" - என்றார்.

(ஐ)

# அமைச்சர் பொன்முடி வீட்டில் வருவாய் பிரிவினர் சோதனை!

சென்னை, ஜூலை 18

தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் வருவாய் துறையினர் சோதனையில் ஈடுபட்டனர்.

கடந்த ஜூன் 13ஆம் திகதி தமிழ்நாடு மின்சாரத்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான போக்குவரத்து துறை முறைகேடு குற்றச்சாட்டையடுத்து அமலாக்கத்துறை அவருக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடத்தினர்.

அதேபோல சென்னையில் தமிழ்நாடு அரசின் தலைமை செயலகத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி அறையிலும் வருவாய்த்துறை சோதனை நடைபெற்றது. இதனையடுத்து, அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார். அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நேற்று வருவாய்த்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். சென்னை உட்பட ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் வருவாய்த்துறை சோதனை செய்து வருகிறது. இதேபோல அவரின் மகன் கௌதம சிகாமணி எம். பி. வீட்டிலும் சோதனை நடைபெற்றது.

# "மோடி மீண்டும் பிரதமராகும்போது அரசியல் சுத்தப்படுத்தப்படும்!"

மதுரை, ஜூலை 18

2024 மக்களவைத் தேர்தலில் பிரதமர் மோடி மீண்டும் வெற்றி பெறும்போது நாட்டில் அரசியலைச் சுத்தப்படுத்தும் சூழல் உருவாகும், என பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

மேலும், நாம் கனவு காணும் அரசியல் மாறும். காமராஜரின் கனவு மலரும். காமராஜர் ஆட்சியில் தொழில் புரட்சி நடந்தது போல், மோடி ஆட்சியிலும் தொழில் புரட்சி நடக்கிறது. இந்தியா தொழில் நாடாக மாறுகிறது.

தென்மாநிலங்களில் இருந்து பா. ஜ. கவுக்கு அதிக எம்.பி. களைகொடுக்கிறோமா என்ற கேள்வி உள்ளது. இந்த முறை தமிழகத்திலிருந்து 39 எம். பி. களை மக்களவைக்கு அனுப்ப வேண்டும்.

2024 மக்களவைத் தேர்தலில் பிரதமர் மோடி மீண்டும் வெற்றி பெறும்போது, நாட்டில் நாம் எதிர்பார்க்கும் உண்மையான அரசியல் மாற்றம் ஏற்படும். அரசியலை சுத்தப்படுத்தும் சூழல் உருவாகும். ஊழல்வாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ஐ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசுக்கு எதிராகவே அவசியம்!

## சுட்டிக்காட்டுகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 18

**"சுகாதார அமைச்சருக்கு எதிராக அல்ல, இந்த அரசுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும்."-என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

"இலாபத்துக்காக தரமற்ற மருந்து இறக்குமதி செய்யப் பட்டதா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. எனவே, சுகாதார அமைச்சரை பதவி நீக்கிவிட்டு, அது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்.

மக்கள் உயிரிழக்கின்றனர், கண்பார்வையை இழக்கின்றனர், இழப்பீடு வழங்கி இப்பிரச்னையை தீர்க்க முடியுமா? எனவே, மக்கள்மீது அக்கறை இல்லாத, சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிய இந்த அரசையே விரட்டியடிக்க வேண்டும். அரசுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும்."- எனவும் அவர் கூறினார். (அ)

# தீப்பற்றி எரிந்த தேயிலை மலை

கொழும்பு, ஜூலை 18

ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்று தோட்டத்தில் தேயிலை மலையுடன் இணைந்த இயற்கை துண்டு காடு தீப்பிடித்துள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த பகுதியில் தீ பற்றியதாக தெரிவித்துள்ள ஹைபொரஸ்ட் பொலிஸார், இச் சம்பவத்தில் சுமார் இரண்டு ஏக்கர் வரையிலான துண்டு காடுடன் தேயிலை மலையும் எரிந்துள்ளதாக கூறினர்.

அதேநேரத்தில் ஹைபொரஸ்ட் இல 03 தோட்ட நிர்வாகத்திற்கு சொந்தமான எட்டு எக்கர் கொண்ட தேயிலை மலையுடன் இணைந்துள்ள பகுதி திடீரெனத் தீ பிடித்தது என தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் தீ பிடித்த பகுதியில் உள்ள தேயிலை மலையில் உயர் தர தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. அத்துடன் துண்டு காட்டு பகுதியுடன் தேயிலை மலையும் காணப்படுவதால் துண்டு காட்டில் ஏற்பட்ட தீ தேயிலை மலைக்கும் பரவி சுமார் எக்கர்கள் தீக்கிரையாகியுள்ளதாகவும் தொழிலாளர்கள் கூறினர். (அ)

# கடன் வாங்கிய பெண்ணை கைவிலங்கிட்டு தாக்கினார் என பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு, ஜூலை 18

பெண் ஒருவரை கைவிலங்கிட்டு கொடூரமான முறையில் தாக்கிய குற்றச்சாட்டில், ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை, வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வத்தளை பொலிஸ் நிலையத்தின் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் அறைப் பக்கத்திலிருந்து பெண்ணொருவரின் அலறல் சத்தம் கேட்டு வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதுபற்றி விசாரித்துள்ளார்.

அப்போது, நெற்றியில் இரத்தக் காயத்துடன் கைவிலங்கிடப்பட்ட நிலையில் ஒரு பெண்ணைப் பார்த்தார்.

மேலதிக விசாரணையில், வத்தளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே அவரைத் தாக்கியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரித்த போது, தாக்குதல் நடத்திய சார்ஜன்ட், ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளது. இவர் வத்தளை பொலிஸில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பணியாற்றி வந்தார். அப்போது அவருக்கும் அந்த பெண்ணுக்கும் இடையே நட்புறவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் பணப்பிரச்னை காரணமாக, பொலிஸ்காரரிடம் கடன் கேட்டுள்ளார். பொலிஸ்காரர் தனது முச்சக்கரவண்டியை அடகு வைத்து 400,000 ரூபாவை பெண்ணிடம் கொடுத்துள்ளார்.

இந்தப் பெண் நேற்று முன் தினம் மாலை வீட்டுப் பணிப் பெண்ணாக வெளிநாட்டுக்குச் செல்லத் தயாராகி வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையறிந்த சார்ஜன்ட் அவரிடம் பணம் கேட்டதாகவும், அதில் ஒரு பகுதியை தருவதாகவும், மீதியை பின்னர் தருவதாக கூறியதாகவும் கூறப்படுகிறது.

வத்தளையில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்திற்கு அருகாமையில் பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் சார்ஜன்ட் சீருடையில் அங்கு வந்திருந்தார். முழுத் தொகையையும் கேட்டு இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்குவாதம் முற்றியதையடுத்து, அந்த சார்ஜன்ட், பெண்ணை அடித்து கைவிலங்குடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளார்.

சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். (அ)

# 50 வீத எரிபொருள் இருப்பு கட்டாயம்!

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பணிப்பு

கொழும்பு, ஜூலை 18

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் ஐம்பது வீத எரிபொருள் இருப்புப் பேணப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொள்ளும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 770 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இது வரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஐம்பது வீத எரிபொருள் இருப்பை பராமரிக்காது போனால், அவை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் கையகப்படுத்தப்படும்.

கொழும்பு, ராஜகிரியவில் இதுவரை விதிகளை பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# குளவி கொட்டுக்கு இலக்கான வயோதிபப் பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 18

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேன பம்பரகலை தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஓய்வு பெற்ற பெண் தொழிலாளி ஒருவர் நேற்றுக் காலை 10 மணியளவில் உயிரிழந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த பெண் தொழிலாளி நாகசேனை பம்பரகலை மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 80 வயதுடைய காளிமுத்து மாரியாய் என தெரியவந்துள்ளது.

இவர் தோட்ட தொழிலில் இருந்து ஓய்வு பெற்றவர். இருப்பினும் கைக்காசுக்கு தோட்டத்தில் தேயிலை கொய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இவர் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஓ. எல். எழுதிய மாணவர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்க திட்டம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த



கொழும்பு, ஜூலை 18

க. பொ. த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்காக பாடசாலைகளில் தொழில் பயிற்சி பாடநெறிகளை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிந்துள்ளார்.

ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் தொழில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்கும் முன் மூன்று மாத காலப்பகுதியை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றார்.

ஒரு மாணவர் உயர்தர வகுப்பை பயில வேண்டாம் என முடிவு செய்தாலும், சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் ஒரு தொழில்பயிற்சி நெறியை முடிப்பதன் மூலம் எதிர்கால வாய்ப்புகள் பற்றி சிறந்த புரிதலை வழங்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 18

இலங்கையின் சுற்றுலாத்துறையானது, சுற்றுலாப்பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வருகின்றது.

இந்த மாதத்தின் முதல் 13 நாட்களில் மாத்திரம், 55 ஆயிரத்து 566 சுற்றுலாப்பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் இந்தியாவில் இருந்தே அதிகளவானோர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

8 ஆயிரத்து 169 பேர் இந்தியாவில் இருந்தும், 4 ஆயிரத்து 474 பேர் பிரித்தானியாவில் இருந்தும், 2 ஆயிரத்து 893 பேர் சீனாவில் இருந்தும் இந்த மாதத்தில் இலங்கைக்கு அதிகளவில் வந்துள்ளனர்.

இதன்மூலம் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 80 ஆயிரத்து 440 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

# தடுப்பூசி செலுத்தப்பட்ட 4 மாத குழந்தையும் பலி!

கொழும்பு, ஜூலை 18

தடுப்பூசி போடப்பட்டதன் பின்னர் சுகவீனமடைந்ததாகக் கூறப்படும் நான்கு மாத பெண் குழந்தை நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளதாக குளியாப்பிட்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொமுகொமுவ பிரதேசத்தில் வசித்து வந்த டபிள்யூ.எஸ்.நிம்னாதி திஸாநாயக்க என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வாயில் இருந்து சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதன் காரணமாக குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி உயிரிழந்ததாக பிரதேசத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெட்டிபொல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தினால் கடந்த 15ஆம் திகதி சிறுமிக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை செலுத்தும் தடுப்பூசி போடப்பட்டதாகவும், மறுநாள் இந்த நோய் ஏற்பட்டதாக சிறுமியின் தந்தை தெரிவித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமியின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டி தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொழிலாளர் உரிமைகளை பறிக்க அரசாங்கம் திட்டம்!

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் நோக்கில் கொண்டுவரப் படவுள்ள உத்தேச தொழிலாளர் சட்டமூலத்தினூடாக அரசாங்கம் தொழிலாளர்களின் உரிமைகளை பறிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.**

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அதன் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்,இதுவரை தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்திய 13 சட்டங்களை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முற்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முக்கிய இலக்காக இருக்க வேண்டும்.

ஆனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு அஸ்வெசும நலன்புரி திட்டம் மற்றும் தற்போதைய புதிய தொழிலாளர் சட்டமூலங்களின் ஊடாக அரசாங்கம் மக்களின் சுமையை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த புதிய சட்டமூலத்தின் ஊடாக தொழிலாளர்களின் 8 மணிநேர வேலை நேரத்தை நீக்கி அதனை 12 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொழிலாளர்களின் அனுமதியுடன் அதனை 16 மணிநேரமாக அதிகரிப்பதற்கான அபாயமும் காணப்படுகிறது.

நாளாந்தம் 8 மணிநேர வேலைநேரம், உலகளாவிய ரீதியில் பல உயிர்களை இழந்து கடினமான போராட்டத்தின் பின்னர் பெறப்பட்ட ஒன்றாகும்.

அதனை இல்லாது செய்வது உழைக்கும் வர்க்கத்திற்கு பேரிழப்பாக மாறும்-என்றார். (அ)



எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

# அமைச்சரவை நியமித்த குழு நேற்று சிங்கப்பூருக்கு பயணம்

கொழும்பு, ஜூலை 18

இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றுதலுக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களுக்கான இணக்கப்பாடு தொடர்பில் கலந்துரையாட அமைச்சரவை நியமித்த விசேட குழு நேற்று சிங்கப்பூருக்கு பயணமானது.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் இந்த குழுவுக்கு தலைமை தாங்குகின்றார்.

குறித்த பேச்சுவார்த்தையை இன்றும் நாளையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கப்பல் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் சட்டத்தரணிகள் மற்றும் அதிகாரிகள் குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மன்னாரில் புதையல் தோண்டிய 4பேர் கைது!

மன்னார், ஜூலை 18

மன்னார் தாராபுரம் பகுதியில் உள்ள புராதன இடத்தில் புதையல் தோண்டிய நால்வர் நிலத்தை சோதனை செய்யும் நவீன ஸ்கானர் கருவியுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

புதையல் தோண்டும் கும்பல் தொடர்பில் மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலத்தில் உள்ள பாறைகள் மற்றும் உலோகப் பொருட்களை ஸ்கானர் மூலம் ஆய்வு செய்து நான்கு சந்தேக நபர்களும் புதையல் தேடியதாக விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் ஸ்கானர் மூலம் சோதனையிட்டபோது குறித்த இடத்தில் புதையல்கள் இருப்பதாக சந்தேகத்தின் அடிப்படையில் புதையல் தோண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜே.வி.பி. நாட்டின் மாற்று அணியல்ல!

## கூறுகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஜூலை 18

மக்கள் விடுதலை முன்னணி நாட்டுக்குத் தேவையான மாற்று அணி அல்ல என்பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மினுவாங்கொடையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, சர்வதேச சமூகத்தை கையாளும் அறிவும் திறமையும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இல்லை எனவும் மகிந்தானந்த குறிப்பிட்டார்.

சந்திரிகாவின் அரசாங்கத்தில் அனுரகுமாரவுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது என்றும் ஆனால், அவர்கள் அதனை பாதியிலேயே கைவிட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனுரகுமார பேஸ்புக்கில் மட்டுமே ஜனாதிபதி என்றும் ஒரு தேநீர்க் கடைகூட நடத்தாத ஜே.வி.பி எப்படி நாட்டை ஆள முடியும் என்றும் மகிந்தானந்த கேள்வியெழுப்பினார்.

# கிழக்கு கடற்பரப்பில் எவ்வித தீப்பரவல் சம்பவமும் இல்லை

கொழும்பு, ஜூலை 18

கிழக்கு கடற்பரப்பில் எவ்வித தீப்பரவல் சம்பவமும் இடம்பெற்றிருக்கவில்லை என கடற்படை விளக்கமளித்துள்ளது.

திருக்கோவில் - கோமாரி கடற்பரப்பில் நேற்று முன் தினம் இரவு தீப்பரவல் ஏற்பட்டதாக கடற்படைக்கு மீனவர்களால் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதனை கடற்படையினர் உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன் நேற்று தேடுதல் பணி இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில், தீப்பற்றிய மைக்கான எந்தவொரு சான்றும் அங்கு கிடைக்கப்பெறவில்லை.

அந்த பகுதியில் பயணித்த சரக்கு கப்பல் ஒன்று பழுதடைந்த நிலையில், நிறுத்தி வைக்கப்பட்டபோது, அதன் ஒளி என கடற்படை குறிப்பிட்டுள்ளது. (அ)

# நாடு முழுவதிலும் தாதியர் போராட்டம்

கொழும்பு, ஜூலை 18

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தரமற்ற மருந்துகளை வழங்குவதற்கு எதிராக நேற்று முதல் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பல வைத்தியசாலைகளை சேர்ந்த சுகாதாரத் துறை ஊழியர்களின் பங்கேற்புடன் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.மடிவத்த தெரிவித்தார்.

திட்டமிட்ட அடிப்படையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை தாதியர் சங்கம் முன்னெடுத்துள்ளதால் வைத்தியசாலையை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினரும் பாதுகாப்புக்காக அழைக்கப்பட்டனர். (அ)

# மனசாட்சி இருக்குமாயின் கெஹலியவும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்!

## கூறுகின்றார் சந்திம வீரக்கொடி



கொழும்பு, ஜூலை 18

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மனசாட்சி இருக்குமாயின் அவரைப் பதவியில் இருந்து நீக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக அவரும் வாக்களிக்க நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஹபராதுவ தொகுதியின் அமைப்பாளருமான சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் கெஹெலியவுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கவலைப்படுகிறேன். அவருக்குச் சென்று வர இடமில்லாத நிலை உருவாகியுள்ளது.

மருந்துகள் இல்லாது மக்கள் இறக்கும் போது, மருந்துகள் இன்றி மக்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளுக்கு செல்ல அஞ்சும் நிலையில், மனசாட்சிக்கு அமைய செயற்பட நேரிடும்.

மோசமான தீர்மானங்கள் காரணமாக நாட்டில் இப்படியான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

விரும்பியபடி இறக்குமதி செய்யப்பட்ட கோவிட் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படாது களஞ்சியங்களில் வைக்கப்பட்டு, அழிந்து போயுள்ளன.

இவற்றில் பெறுமதி பல பில்லியன் ரூபா. எவ்வித அனுமதிப் பத்திரங்கள், அனுமதிகள் இன்றி இறக்குமதி செய்யப்பட்டுள்ள மருந்துகள் காரணமாக நாட்டு மக்கள் மருந்துகளை பெற்றுக் கொள்ள அஞ்சுகின்றனர்.

தமக்கு நோய் ஏற்பட்டால் வைத்தியசாலைகளுக்கு மக்கள் செல்கின்றனர். எனினும் இறந்தாலும் பரவாயில்லை வீட்டில் இருப்பது சிறந்தது என்ற மன நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முகாமைத்துவம், நேர்மை, தூய்மை தொடர்பான பொறுப்பு மற்றும் அப்பாவி வறிய மக்களின் உயிர்கள் தொடர்பான எவ்வித அனுதாபமும் இல்லாத அரசாங்கமாக தற்போது அரசாங்கம் மாறியுள்ளது-என்றார். (அ)

# பிரேரணையை கண்டு பயந்து ஓடமாட்டேன்!

## எதிர்கொள்ள தயார் என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 18

**எதிர்க்கட்சிகள் கொண்டு வர உத்தேசித்துள்ளதாக கூறப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்க தான் தயாரென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**



சவாலுக்கு பயந்து பொறுப்பிலிருந்து விலகி தப்பியோடும் நபர் தான் அல்லவெனவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுன குண்டசாலை தொகுதி குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். சுகாதாரத்துறை தொடர்பாக திட்டமிட்டு பொய் பிரசாரங்களை சிலர் மேற்கொண்டு வருவதாகவும் அவை அனைத்தையும் நிரூபிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தாம் இதுவரை 08 அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சராக நாட்டில் 22 இலட்சம் மக்களின் சுகாதாரம் தொடர்பான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஊழல் எதிர்ப்புச் சட்டமூல சூழ்நிலை விவாதம் நாளை

கொழும்பு, ஜூலை 18

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் என்பவற்றின் குழுநிலை விவாதம் நாளை புதன்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இடம்பெறவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதனையடுத்து, தனியார் உறுப்பினர் சட்டமூலமான இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக பிரேரிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 18

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் அரசியல் குழு உறுப்பினர் யுவான் ஜியாஜூன் 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

அவர் நாளை முதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார் என சீன தூதரகம் தமது டுவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது.

யுவான் ஜியாஜூன் சீனாவில் சோங்கிங் நகர சபையின் செயலாளராகவும் பணியாற்றுவதுடன், சீன அரசியலில் அவர் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வு

மன்னார், ஜூலை 18

'ஆடிப் பிறப்பில் தமிழர் நாம் கூடிக் கொண்டாடிக் குதூகலிப்போம்' எனும் தொனிப்பொருளில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு ,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



அதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றதோடு ஆடி மாதத்தின் சிறப்பு குறித்து விசேட சொற்பொழிவு இடம்பெற்றது.

மேலும் வெசாக் பக்தி கீதத்தில் பங்குபற்றிய அலுவலர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் ரன் விம வீடமைப்பு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 4 பேருக்கு முதல் கட்டமாக தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிறப்பு அம்சமாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனின் சேவையை பாராட்டி அவருக்கு விசேட விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 18

கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு துன்புறுத்தல்கள் ஏற்படுவதை தடுக்க எதிர்வரும் சில வாரங்களில் அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இந்த தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் ஓரளவான துன்புறுத்தல்களை கட்டுப்படுத்த முடியும் என அவர் கூறினார்.

தற்போது நாட்டில் கல்வி பயிலும் மாணவர்களை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும், துன்புறுத்தும் செயல்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரத்தினபுரி, எஹலியகொட பகுதியில் 10 வயதான பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் 46 வயதுடைய ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, பாடசாலை மாணவியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டை எதிர்நோக்கிய அம்பாலங்கொடை கொடஹேன கனிஷ்ட பாடசாலையின் முன்னாள் அதிபருக்கு 30 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்குமாறும் உத்தரவு விடுக்கப்பட்டது.

(அ)

# யாழில் தங்கத் தாத்தாவின் சிலையருகே ஆடிப்பிறப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள, தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலையருகே ஆடிப்பிறப்பு விழா நேற்று காலை நடைபெற்றது.

தங்கத் தாத்தா பேரவையின் ஏற்பாட்டில், ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.எஸ்.சிவஞானராஜா தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தங்கத் தாத்தாவின் சிலைக்கு மலர் சாற்றி, தங்கத் தாத்தா இயற்றிய "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்ற பாடல் பாடி, கூடம் ஏற்றி ஆடிக்கூழ் பரிமாறி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

(அ)

# டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாண 'டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள்' கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

2016 ஆண்டு முதல் வடமாகாணத்தில் 82 டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு 22 ஆயிரம் ரூபா வீதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் அதில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.



வட மாகாண பிரதம செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேன விடம் இதன்போது மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களோடு கலந்துரையாடினர்.

(அ)

ஈழநாடு



# ம(பி)ழையால் வந்த சேதம்!

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பெருமழையால் இந்தியாவின் வடமாநிலங்கள் தத்தளித்துவருகின்றன. மழை வெள்ள பாதிப்புகளால் ஹிமாசல், உத்தரகண்ட், பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், உத்தர பிரதேச மாநிலங்களில் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இமயமலையையொட்டி உள்ள ஹிமாசல பிரதேசம்தான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மலைகள் சூழ்ந்த பிரதேசமாக இருப்பதால், பல இடங்களில் பெரும் நிலச்சரிவு காரணமாக மணாலி -லே தேசிய நெடுஞ்சாலை, குலு - மணாலி தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட 1,300 சாலைகள் மூடப்பட்டுள்ளன. தொடர்மழை காரணமாக, 4,680-க்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதுடன் துணை மின்நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருளில் மூழ்கி உள்ளன.





குடிநீர் விநியோகத் திட்டங்களும் கடும் பாதிப்பு அடைந்துள்ளதால், இவ்வளவு கடுமையான மழைக்கு இடையே குடிநீர் தட்டுப்பாட்டையும் அம்மாநில மக்கள் எதிர்கொண்டுள்ளனர். மணாலியில் பியாஸ் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மூன்று மாடிக் கட்டடம் ஒன்று சீட்டுக் கட்டுபோல சரிந்தது. இதேபோன்று, பல பகுதிகளிலும் சிறு பாலங்கள், சாலைகள், கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. 40 பெரிய பாலங்கள் கடும் சேதமடைந்துள்ளன.

சுமார் 14,100 அடி உயரத்தில் உள்ள சுற்றுலாத் தலமான சந்தர்தாலில் 300க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கி உள்ளனர். விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.4,000 கோடி (இந்திய மதிப்பு) மதிப்புக்கு உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ள அம்மாநில முதல்வர் சுக்வீந்தர் சிங் சுக்கு, வீட்டைவிட்டு மக்கள் வெளியே வரவேண்டாம் என்று எச்சரிக்கும் அளவுக்கு நிலவரம் தீவிரமடைந்துள்ளது.

ஹிமாசல், பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களில் பாயும் சட்லெஜ், ராவி, பியாஸ், தில்லியில் யமுனை ஆகிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அபாய கட்டத்தை நெருங்கி உள்ளது. ஹிமாசல், உத்தரகண்ட் மாநிலங்களில் உள்ள பல ஆறுகளிலும் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. உத்தரகண்ட் மாநிலத்திலும் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் பத்ரிநாத் நெடுஞ்சாலை உள்ளிட்ட பல சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளது.

புதுதில்லியையும் மழை விட்டுவைக்கவில்லை. ஜூலை 8, 9 ஆகிய இருநாட்களில் மட்டும் தில்லியில் 153 மி.மீ. மழை பெய்துள்ளது. 40 ஆண்டுகளில் அதிகபட்ச மழைப்பொழிவு இது. அண்மைக் காலங்களில் இதுபோன்று நிகழ்ந்ததில்லை.

“இதுபோன்ற மழைப்பொழிவை எதிர்கொள்ளும் வகையில் தில்லியில் வடிகால் அமைப்புகள் கட்டமைக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் கடும் சிரமங்களை சந்திக்க நேரிட்டது” என்கிறார் மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவால். இப்போதுள்ள மழை வடிகால் கட்டமைப்பு 1976-இல் அமைக்கப்பட்டது. தில்லியில் அப்போதைய மக்கள்தொகை 60 லட்சம். இப்போது மக்கள்தொகை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



பஞ்சாப் மாநிலத்தின் அனந்தபூர்சாஹிப், பதான்கோட், ஃபதேகர்சாஹிப், மொஹாலி போன்ற பகுதிகளில் சாலைகள், தண்டவாளங்கள், விவசாய நிலங்கள் நீரில் மிதக்கின்றன. மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க மொஹாலி உள்ளிட்ட பல பகுதிகளிலும் ராணுவத்தின் வெள்ள மீட்புப் பிரிவு வீரர்கள் களமிறங்கி உள்ளனர். சண்டீகரில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள, வெள்ளத்தால் சூழப்பட்ட சித்காரா பல்கலைக்கழகத்தில் இருந்த 900 மாணவர்கள், ராணுவ வீரர்களின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

வறண்ட மாநிலமாகக் கருதப்படும் ராஜஸ்தானின் சிரோஹி மாவட்டத்தில் உள்ள மவுண்ட் அபுவில் ஒரே நாளில் 231 மி.மீ. அளவுக்கு மழை கொட்டித் தீர்த்தது. ஜூலை மாதத்தில், பஞ்சாபில் வழக்கத்தைவிட 200 சதவீதமும் உத்தரகண்டில் 115 சதவீதமும், ஹரியாணாவில் 113 சதவீதமும் ஹிமாசலில் 110 சதவீதமும் அதிகமாக மழை பெய்துள்ளது.

நாடு முழுவதும் ஜூன் 1 முதல் தற்போது வரை பெய்ய வேண்டிய மழை அளவில் 40 சதவீதம் பற்றாக்குறை உள்ளது. ஆனால், வடமேற்கு இந்தியாவில் இந்த காலகட்டத்தில் 64 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. ஜூலை மாதத்தில் இதுவரை வடமேற்கு இந்தியாவில் 104 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது.

பருவநிலை மாற்றங்கள் காரணமாக பல பகுதிகளிலும் இதுபோன்ற எதிர்பாராத மழைப்பொழிவு அண்மைக்காலங்களில் காணப்படுகிறது. பிபர்ஜாய் புயல், காற்றின் திசை மாறுபாடு ஆகியவற்றின் காரணமாகவே இப்படி எதிர்பாராத மழை பொழிவதாக இந்திய வானிலை ஆய்வு மையத் தலைவர் மிருத்யுஞ்ஜய் மொஹபாத்ரா கூறுகிறார்.

கட்டுப்பாடற்ற வளர்ச்சிப் பணிகள் மலை பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதால் மழைக் காலத்தில் நிலச்சரிவுகளால் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. பல மாநிலங்களில், சமவெளிப் பகுதிகளிலும் பெரிய மழையை எதிர்கொள்ளும் அளவுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்யப்படவில்லை.

கடந்த பல ஆண்டுகளாகவே இதுபோன்று நடந்துவந்தபோதும் அரசுகள் விழித்துக் கொள்ளாததால் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. மனிதன் தன் பேராசையின் காரணமாக தொடர்ந்து இயற்கையை அழித்து வருகிறான். இயற்கையும் அவ்வப்போது எச்சரிக்கை செய்துகொண்டே இருக்கிறது.

இயற்கையின் எச்சரிக்கையைப் புறக்கணித்ததால் ஏற்படும் பேரழிவுகள் இவை என்பதை உணர்ந்து திருந்தாதவரை, உயிரிழப்புகளை நாம் தவிர்க்க முடியாது.

(தினமணி)

# கோட்டாபய பதவி விலகலுக்கு பிறகு ஒரு வருடம் தொடர்ந்து நெருக்கடிக்குள் இலங்கை

# புதிய தலைமைத்துவம் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கவும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் தவறிவிட்டது



மீனாக்சி கங்குலி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை நாட்டை விட்டு தப்பியோட நிர்ப்பந்தித்த பல வாரகால அமைதிவழி போராட்டங்களுக்கு பிறகு 2022 ஜூலை 13 இலங்கையின் தலைநகர் கொழும்பு வீதிகளில் மக்கள் கொண்டாட்டங்களில் இறங்கினர். பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்டதாக நீண்டகாலமாக குற்றஞ்சாட்டப்பட்டுவரும் ராஜபக்ச ஜனாதிபதி என்ற வகையில் பரந்தளவு ஊழல்கள் மற்றும் குற்றச்செயல்களுக்கு தண்டனையின்மை தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் பொருளாதார வீழ்ச்சிக்கு நாட்டைக் கொண்டு சென்றார்.

ஆனால் தற்போது ஒரு வருடம் கடந்த நிலையில் சில மேலோட்டமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும் பெருமளவு மக்களின் மனித உரிமைகளைப் பாதித்த பொருளாதார நிலைவரத்தில் நிலைபேறான முன்னேற்றத்தைக் காணவில்லை. பொருளாதார நெருக்கடியின்போது காணப்பட்ட படுமோசமான எரிபொருள் தட்டுப்பாடு தளர்ந்துவிட்டது. ஆனால் சுமார் எழுபது இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் - சனத்தொகையில் 30 சதவீதமானோர் - உணவு பாதுகாப்பின்மையின்மையினால் பாதிக்கப்பட்டு மனிதாபிமான உதவியை நாடி நிற்கிறார்கள் என்ற ஐக்கிய நாடுகளின் விபரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்களில் 17 சதவீதமானோர் குறைவளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேவேளை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டங்களை அடக்க பொலிஸையும் இராணுவத்தையும் பயன்படுத்தினார். கொடுமையான பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இடைநிறுத்துவதாக முன்னைய அரசாங்கம் அறிவித்த அதேவேளை, விக்கிரமசிங்க போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர் தலைவர்களை தடுத்து வைக்க அதே சட்டத்தைப் பயன்படுத்தினார்.

புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலம் பொலிஸூக்கும் இராணுவத்துக்கும் பரந்தளவு அதிகாரங்களை கொடுப்பதாகவும் பேச்சுரிமையுடன் தொடர்புடைய பல அம்சங்களை குற்றச்செயலாக்கும் ஏற்பாடுகளை கொண்டதாகவும் அமைந்திருந்தது. பரந்தளவு எதிர்ப்புக்கு மத்தியில் சட்டமூலத்தை தாமதப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்ட அரசாங்கம் பேச்சுச் சுதந்திரத்துக்கு எதிராக வேறு சட்டங்களை பயன்படுத்துகிறது.

வடக்கு, கிழக்கில் பல்வேறு சாட்டுகளின் பேரில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான வணக்கத்தலங்கள் உட்பட காணிகள் அபகரிப்பு போன்ற சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான கொள்கைகளையும் அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கிறது.

இலங்கையின் 1983 - 2009 உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவுகூர விரும்பும் தமிழர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். நினைவுகூரலுக்குத் தடைவிதிக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் வேண்டி போராடும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் புலனாய்வு அமைப்புக்களின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உள்ளாகிறார்கள். நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ளவர்களையும் விட வடக்கு, கிழக்கில் உள்ள சிறுபான்மை இனத்தவர்கள் கருத்துவெளிப்பாடு மற்றும் ஒன்றுகூடுதல் தொடர்பில் கூடுதலான அளவுக்கு கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்கிறார்கள்.

இலங்கை தொடர்ந்தும் பொருளாதார, அரசியல் மற்றும் மனித உரிமைகள் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதும் பாரிய குற்றச்செயல்களுக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைப்பதும் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை கையாளுவதற்கு அவசியமானவை என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(கட்டுரையாளர் மனித உரிமைகள் கண்காணிப்பு **(Human Rights Watch)** அமைப்பின் ஆசியப் பிரிவு பிரதி பணிப்பாளர்)



# பயன்பாட்டிலுள்ள மருந்துகளை மீளவும் ஆய்வுக்கு உட்படுத்துக!

## சுகாதார வல்லுநர்களின் கூட்டமைப்பு

கொழும்பு, ஜூலை 18

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 500 க்கும் அதிகமான மருந்துகள் பதிவுகளுக்கு அப்பால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மருந்துகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைக்கு தீர்வாக பதிவு செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட அனைத்து மருந்துகளும் மீண்டும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சுகாதார தொழில் வல்லுநர்களின் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

குழுவொன்றை நியமிக்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு சுகாதாரத் துறையினர் சில கருத்துகளை வெளிப்படையாக முன்வைக்கின்றனர். ஒவ்வாமை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்



டுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இலங்கையில் ஒவ்வாமை தொடர்பில் சுகாதார துறையில் நிபுணத்துவம் பெற்ற எவரும் இல்லை.

நாம் அறிந்த வகையில் சிறீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒருவர் இருக்கிறார். இந்நிலையில் இவரை போன்ற நிபுணத்துவம் பெற்ற ஒருவரின் பங்களிப்பு இந்த குழுவில் இருக்க வேண்டும்.

ஏனெனில், தற்போது இந்த பிரச்னை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். எனவே நோயாளர்களின் தரப்பிலிருந்து கருத்து தெரிவிக்க வேண்டிய ஒருவர் இந்த குழுவில் இருக்க வேண்டியது அவசியமாகும் என்பதை ஜனாதிபதிக்கும், அமைச்சருக்கும் யோசனையாக முன்வைக்கிறோம்.

அரசாங்கம், ஜனாதிபதி, சுகாதார அமைச்சு, அமைச்சர் இந்த நேரத்தில் நோயாளர்கள் சார்பில் இருக்க வேண்டுமே தவிர நிறுவனத்துக்கு சார்பாகவும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் பக்க சார்பான அறிக்கைகளில் அல்ல. மருந்து தொடர்பில் ஆழ மான ஆய்வு மேற்கொள் ளப்படும்.

கடந்த வருடத்தில் மாத்திரம் மருந்துகளுக்கு சாதாரண பதிவுகளின்றி 174 மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த வருடம் மாத்திரம் 500 இற்கும் அதிகமான மருந்துகள் பதிவுகளுக்கு அப்பால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

தற்போது இந்த மருந்துகள் மருத்துவமனைகளில் உள்ளன. இந்த மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. மருந்து பிரச்னைக்கு தீர்வாக பதிவு செய்யப்பட்டதாகக் கூறி கொண்டு வரப்பட்ட மருந்துகள் ஆய்வுகளுக்கு உட்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# சகல விவசாயிகளுக்கும் இலவச உரம் வழங்கப்படும்

## விவசாய அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் 2023/24 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மேலும் ஓர் இரசாயன உரம் இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடியதாகவும் அவரிடம் இருந்து நல்ல பதில் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு, மூன்று பயிர் செய்கைக்கு பிறகு விவசாயிகளுக்கு இலவச ரி. எஸ். பி. (ட்ரிபிள் சுப்பர் பொஸ்பேட்) வழங்க அரசு நடவடிக்கை எடுத்தது. கடந்த பெரும் போகத்தில் நெல் பயிரிட்ட அனைவருக்கும் இந்த ஆண்டு போகத்தில் நெல் செய்கை செய்தாலும், செய்யாவிட்டாலும், அவர்களுக்கு இலவசமாக ரி. எஸ். பி. வழங்கப்படும்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கத்தில் அரசு இந்தச் சலுகைகளை வழங்குகிறது. கடந்த பெரும் போகத்தில் உரம் கொள்வனவு செய்வதற்கு



தேவையான பணத்தை அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்கியதுடன், இம்முறை உரங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான பணத்தை மானியமாக வழங்கியுள்ளது.

அடுத்த பெரும் போகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் உரங்களை கொள்வனவு செய்வதற்கு வவுச்சர்களுக்கு பதிலாக விவசாயிகளின் கணக்குகளுக்கு பணத்தை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் படி, விவசாயிகள் விரும்பினால் தனியார் அல்லது அரசு உர நிறுவனங்களிடம் இருந்து இரசாயன உரங்கள் அல்லது கரிம உரங்களை கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுகிறது. (ஐ)

# மனைவியை குத்திக் கொலை; சந்தேகத்தில் கணவன் கைது

கொழும்பு, ஜூலை 18

மனைவியை குத்திக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் கணவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகலை, கும்புக்கன வெல்லச்சி பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை காலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குடும்ப தகராறால் கணவன் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்தார் என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் ஆவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)






# நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகங்களே!

## முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன்

அம்பாறை, ஜுலை 18

**“நாடு கடந்த ஆட்சியில் அதலபாதாளத்துக்கு சென்று கொண்டிருந்த பொழுது அந்த நாட்டை மீட்டு பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகங்களே. ஒரு நாட்டின் முதுகெலும்பு ஊடகம் என்றால் அது மிகைஅல்ல.”**

-இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

நாட்டில் முன்னர் கோர ஆட்சி இடம் பெற்றது. ஏழு லட்சம் பேர் வேலை இழந்தார்கள். பிழையான கொள்கை, அத்தியாவசிய சேவை மற்றும் விவசாயத்திலே கை வைத்தார்கள். ஊழல்கள், மோசடிகள் மலிந்தன. நாடு பின் தள்ளப்பட்டது. இவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகமே.

இன்று அத்தகைய ஊடகங்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவர எத்தனிக்கிறார்கள். அப்படியானால் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படும். எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் அதனை முற்றாக எதிர்க்கின்றோம்.

கடந்த காலத்திலே தமிழுக்கும் தேசியத்துக்குமாக பயணித்த சிவராம் ,நடேசன், நிர்மலராஜன் போன்றோர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால், இன்றும் அவர்கள் நினைவு கூரப்படுகின்றார்கள் என்றால் அவர்கள் பக்க சார்பின்றி நியாயமாக ஊடக தர்மத்தின் படி சேவை ஆற்றியவர்கள்.

எனவே, சமூக ரீதியாக நீங்கள் இயங்கி பக்கச்சார்பற்று சிறப்பாக நீங்கள் இயங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்- என்றார்.

(அ)



# கிழக்கு சுகாதார அமைச்சின் செயலர் வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயம்!

மட்டக்களப்பு, ஜுலை 18

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் திக்கோடை மற்றும் பளுகாமம் உள்ளிட்ட பல பிரதேச வைத்தியசாலைகளுக்கு தொடரான திடீர் விஜயங்களை மேற்கொண்டு வைத்தியசாலைகளின் நிலைமைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகிறார்.

இந்த விஜயத்தின்போது, வைத்தியசாலையில் நிலவுகின்ற ஆளணி மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட பல பிரச்னைகள் பற்றி கேட்டறிந்து கொண்டதுடன் அது தொடர்பான விடயங்களையும் நேரடியாக பார்வையிட்டார்.

மேலும், ஆண் நோயளர் விடுதி மற்றும் பெண் நோயளர் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்களை நேரடியாக பார்வையிட்டதுடன், அவர்களின் நோய் தொடர்பிலும், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சை பராமரிப்பு மற்றும் உணவு வசதிகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த விஜயத்தில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கனகமுத்து கிருஷ்ணபிள்ளை உள்ளிட்ட சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (அ)

# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு புதிய பெயர்ப்பலகை திறப்பு!

நிந்தவூர், ஜுலை 18

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான புதிய பெயர்ப்பலகை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

காரைதீவைச் சேர்ந்த மார்க்கண்டு வித்தியானந்தன் அவரது அமரத்துவம் அடைந்த குடும்ப உறவுகள் சார்பாக இந்த பெயர்ப் பலகையை வழங்கிய்டுள்ளார் .




பெயர்ப்பலகை திறப்பு விழாவில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில், ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, அனுசரணையாளர் மா.வித்தியானந்தன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த. மோகன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். (அ)

# கிராமிய சந்தை திறப்பு விழா

மட்டக்களப்பு, ஜுலை 18

பங்காளர் நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் வாகரைப் பிரதேச பெண்களின் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும் மற்றும் மீனவப் பெண்களின் சுய தொழில் முயற்சியினை வலுப்படுத்தும் முகமாகவும் வாகரைப் பிரதேச பெண்களுக்கென்று பிரத்தியேகமான கிராமிய சந்தை ஒன்று கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வாகரை பிரதேச சபை சந்தைக் கட்டடத் தொகுதியில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான திருமதி மயூரி ஜனன் தலைமையில் இந்த திறப்புவிழா இடம்பெற்றது.

(அ)

# உகந்தை மலை முருகன் ஆலய ஆடிவேல் கொடியேற்றம் இன்று!



காரைதீவு, ஜுலை 18

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம் பெற்று ஆகஸ்ட் 02ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை கதிர்காமம் உற்சவம் முன்கூட்டியே நிறைவடைந்திருப்பதால் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல்விழா மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த சம்மாந்துறை

காரைதீவு, ஜுலை 18

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய அமரர்களான திரு, திருமதி மகாலிங்கசிவம் ஞாபகார்த்த ரி-10 கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்மாந்துறை அணி வெற்றி வாகை சூடி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இச் சுற்றுப் போட்டியில் 32 கழகங்கள் விலகல் முறையில் கடந்த இரண்டு மாதங்களாக பங்கு காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் பங்குபற்றிவந்தன.

இறுதிப் போட்டிக்கு சம்மாந்துறை அணியும் சாய்ந்தமருது பிளாஸ்ரர் அணியும் மோதின.

இந்த மாபெரும் இறுதிப் போட்டியானது கழக தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாக நடந்தேறியது.




இறுதி போட்டியில் பிரதம அதிதியாக மகாலிங்கசிவம் அசோக் கலந்து சிறப்பித்தார்.

இந்த இறுதி போட்டியில் சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியை எதிர்த்து சம்மாந்துறை எஸ்.எஸ்.சி அணி மோதியிருந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற எஸ்.எஸ்.சி அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அதனடிப்படையில் 10 ஓவர்கள் முடிவில் எஸ்.எஸ்.சி அணியானது 109 ஓட்டங்களை பெற்றது.

110 என்ற சவால் மிக்க இலக்கினை அடையும் நோக்கில் களமிறங்கிய பிளாஸ்டர் அணி 10 ஓவர்கள் முடிவில் 84 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனடிப்படையில் எஸ்.எஸ்.சி அணியானது 26 ஓட்டங்களினால் வெற்றி வாகை சூடியது.

முதல் பரிசாக 30ஆயிரம் ரூபாவும் பாரிய வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

(அ)

# பதற்றத்தை ஏற்படுத்தும் வடகொரியா!

பியொங்யாங், ஜூலை 18

**கொரிய தீபகற்ப பகுதியில் தொடர் அணு ஆயுத மற்றும் ஏவுகணை சோதனைகள் மூலம் வடகொரியா பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.**

**அதன்படி கடந்த வாரம் ஹ்வாசாங் 18 என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியிருந்தது.**

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியாவை சேர்ந்த 4 தனிநபர்கள் மற்றும் 3 நிறுவனங்கள் மீது தென்கொரியா தடை விதித்தது.

இந்தநிலையில் தற்போது ஜப்பான் கடல் பகுதியில் அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து முத்தரப்பு போர்ப் பயிற்சியை நடத்தியுள்ளது.

இதன்மூலம் 3 நாடுகளும் தங்களது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், அபாயகரமான ஏவுகணைகளுக்கு எதிரான தாக்குதல் திறனை மேம்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என தென்கொரியா தெரிவித்தது.



இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் மாதம் முத்தரப்பு ஏவுகணை பாதுகாப்பு பயிற்சி நடந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# போருக்கு இடையே சிவனை தரிசிக்க அமர்நாத் செல்லும் உக்ரைன் பெண்!

உக்ரைனை சேர்ந்த இளம் பெண் அமர்நாத் யாத்திரை மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், “ரஷ்யாவின் தீவிர ராணுவ தாக்குதலை எனது நாடு எதிர் கொண்டுள்ளது. இந்த சூழ்நிலையிலும், சிவபெருமான் மீது கொண்டுள்ள பக்தியின் காரணமாக இந்த யாத்திரையை மேற்கொள்ள முடிவு செய்து இந்தியா வந்தேன்.

பனிலிங்க வடிவில் சிவனை தரிசிக்க வந்த இந்த யாத்திரையின் போது மிகவும் இனிமையானவர்களை சந்திக்க சிவபெருமான் ஆசியால் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள், தங்களது கூடாரங்கள், வீடுகள் மட்டுமின்றி இதயங்களையும் எனக்காக திறந்து வைத்தனர். அவர்களது குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக கருதி உதவிகளைச் செய்தனர்.

எனக்கு உணவு, சுகாதார வசதிகள் தந்து பாதுகாப்பாக வைத்துக் கொண்டனர்-என்றார்.

(அ)

# சீனிக்குப் பதிலான இனிப்பு சுவையூட்டியால் புற்றுநோய்

## உலக சுகாதார நிறுவனம்

நியூயோர்க், ஜூலை 18

மென்பானங்கள் மற்றும் உணவு வகைகளில் சேர்க்கப்படுகின்ற இனிப்புச் சுவையூட்டிகள் மனிதர்களில் புற்றுநோயைக் - குறிப்பாக கல்லீரல் புற்றுநோயை-உண்டாக்கலாம்.

உலக சுகாதார நிறுவனத்துடன் சேர்ந்து இயங்குகின்ற சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி முகவரகம் இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளது.

உலகில் சீனிச் சுவைக்குப் பிரதியீடாகப் பரந்த அளவில் உபயோகிக்கப்பட்டு வருகின்ற இனிப்புச் சுவையூட்டிக்கும்

புற்றுநோய்க்கும் உள்ள தொடர்பு பற்றி உலக அமைப்பு வெளியிடுகின்ற முதல் பகிரங்க மதிப்பாய்வு இதுவாகும்.

உலகெங்கும் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 300 ஆய்வுகளது அறிக்கைகளின் அடிப்படையிலேயே செயற்கை இனிப்புச் சுவையூட்டி “மனிதர்களில் புற்றுநோயை உண்டாக்கலாம்” என்ற முடிவை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இனிப்புச் சுவையூட்டிகள் புற்றுநோயை உருவாக்கலாம் என்ற முடிவு நீண்டகாலத்துக்கு முன்னரே பல்வேறு ஆய்வுகளில் தெரியவந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தி அறிவிப்பதை உலக சுகாதார நிறுவனம் தாமதப்படுத்தி வந்தது. இனிப்புச் சுவையூட்டியை சரியான அளவில் உள்ளெடுப்பது ஆபத்தை ஏற்படுத்தாது என்று அமெரிக்கா உட்பட மற்றும் சில நாடுகளது உணவு மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார அமைப்புகள் வாதாடி வந்தமையே அதற்குக் காரணமாகும்.

உலகப் புகழ்பெற்ற “கோலா” மென்பானம் உட்பட ஏராளமான பானங்கள், உணவுகள், பற்பசை போன்றவற்றில் இனிப்புச்சுவைக்குப் பதிலாக இந்த “யுளியசவயஅந” எனப்படும் செயற்கைச் சுவையூட்டி கலக்கப்படுகின்றது. கடந்த பல தசாப்தங்களாக நீரிழிவு, உடற்பருமன் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட பலரும் செயற்கை இனிப்புச் சுவையூட்டிய மென் பானங்களையும் உணவுவகைகளையும் மிகப் பரந்துபட்ட அளவில் உள்ளெடுத்து வருகின்றனர்.




1964 இல் அறிவியலாளர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட வெண் நிறத் தூள் போன்ற இந்தச் செயற்கை இனிப்பு சாதாரண சீனி மற்றும் சர்க்கரையை விடவும் இருநூறு மடங்கு இனிப்புச் சுவை கொண்டது.

அமெரிக்கா 1974 இல் அதனை உணவுப் பொருள்களில் பாவிப்பதற்கு அனுமதித்தது. அதே செயற்கை இனிப்பை நுகர்வுக்கு அனுமதிப்பதற்கு பிரான்ஸ் 1994 வரை காத்திருந் தது.

(அ)

# சீன ஆசிரியைக்கு மரண தண்டனை

பீஜிங், ஜூலை 18

சீனாவில் ஆசிரியை ஒருவரின் கொடும் செயல் காரணமாக அவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

25 மாணவர்களுக்கு உணவில் விஷம் வைத்து கொல்ல முயன்ற 40 வயதான ஆசிரியை ஒருவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஹெனான் மாகாணத்தைச் சேர்ந்தவர் வாங் யுன். இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு மெங்மெங் என்ற பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிந்துள்ளார். அப்போது மாணவர்களை நிர்வகிப்பது தொடர்பாக சக ஊழியருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியை 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம், 25 மாணவர்கள் உண்ணும் உணவில் சோடியம் நைட்ரேட் விஷத்தை கலந்து உள்ளார்.

இதை அறியாத மாணவர்கள், அந்த உணவைச் சாப்பிட்டதால் வாந்தி, மயக்கம் ஆகிய உடல் உபாதைகளுக்கு உள்ளாகினர்.

அதைத் தொடர்ந்து, 25 மாணவர்களும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் 24 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு சில தினங்களிலேயே குணமடைந்தனர்.

இதன்பின்னர், குறித்த ஆசிரியை கைது செய்யப்பட்டு, அவருக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 10 மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த ஒரு மாணவர் உறுப்புகள் செயலிழந்து உயிரிழந்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பிலான விசாரணைகளின் போது, “குற்றவாளியான ஆசிரியை வாங் யுன் பாடசாலையில் மாணவர்களுக்கு விஷம் கொடுப்பதற்கு முன்னர், கணவருக்கும் அதே போன்று விஷம் கொடுத்து கொலைசெய்ய முயன்றிருக்கிறார்.” என தெரியவந்துள்ளது.

எனினும் அவரது கணவர் சிறியளவிலான பாதிப்புகளுடன் உயிர் பிழைத்திருக்கிறார்.

இந்த இரண்டு வழக்குகளிலும், பழிவாங்கும் நோக்கில் குற்றவாளி செயற்பட்டிருப்பது நிரூபணம் ஆனதால், வாங் யுன்-க்கு மரணதண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

(அ)

# தென் கொரிய மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32!



சியோல், ஜூலை 18

தென் கொரியாவில் தொடர் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்வடைந்துள்ளது.

தென்கொரியாவின் 13 நகரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சீரற்ற காலநிலைக் காரணமாக 100 இற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அததுடன் தென்கொரியாவின் முக்கிய சில நகரங்களுக்கான ரயில் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கையுடனான டெஸ்ட் பாகிஸ்தான் வலுவானநிலை!



காலி, ஜுலை 18

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்களை குவித்து வலுவான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி களமிறங்கிய இலங்கை அணியில் மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா ஆகியோரின் ஆட்டத் தால் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 312 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. முதல்நாள் ஆட்டம் முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 242 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கிய போது தனஞ்சய 94 ஓட்டங்களுடனும் ரமேஷ் மெண்டிஸ் 0 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடங்கினர்.

அபாரமாக ஆடிய தனஞ்சய டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 10ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். பின் வந்த வீரர்கள் தாக்குப்பிடிக்கவில்லை. ரமேஷ் மெண்டிஸ் 5, பிரபாத் ஜெயசூர்யா 4, கசுன் ராஜித 8 என ஆட்டமிழந்தனர். இதனிடையே 122 ஓட்டங்களுடன் தனஞ்சய ஆட்டமிழந்தார். விஸ்வ பெர்னாண்டோ ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 95.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஷா அப்ரிடி, அப்ரர் அஹமட், சல்மான் ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது.

இதில், பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் 13 ஓட்டங்களுடன் பிரபாத் ஜெயசூர்யா பந்துவீச்சில் அவுட் ஆனார். பிரபாத் ஜெயசூர்யாவுக்கு எதிராக 5 இன்னிங்ஸ்களில் விளையாடிய பாபர் அசாம் 143 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 15 பௌண்டரி 3 சிக்ஸர் அடங்கும். முக்கியமாக 4 முறை ஆட்டமிழந்துள்ளார்.

ஆரம்பத்தில் சற்று தடுமாறிய பாகிஸ்தான் அணிக்கு ஆறாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய சகீல் - சல்மான்இணை சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

45 ஓவர்கள் நிறைவில் நேற்று ஆட்டம் நிறுத்தப்பட்டபோது பாகிஸ்தான் 5 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்களை குவித்திருந்தது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூர்யா 3 விக்கெட்களை வீழ்த்தினார். (ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ் அல்கராஸ் சம்பியன்!



லண்டன், ஜுலை 18

கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் இறுதிப் போட்டியில், சேர்பியாவின் நோவக் ஜொகோவிச்சை வீழ்த்தி ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் முதன்முறையாக பட்டம் வென்றார்.

ஆண்டின் 3ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் ஜுலை முதல் வாரத்தில் தொடங்கி நடைபெற்று வந்தது. விறுவிறுப்பான சுற்றுகளின் இறுதிக் கட்டத்தில், அல்கராஸ், ஜொகோவிச் ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

ஜொகோவிச் (36), அல்கராஸ் (20) இடையே 16 வயது வித்தியாசம் இருக்கும் நிலையில், கடந்த 50 ஆண்டுகளில் கிராண்ட்ஸ்லாம் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் மோதும் வீரர்களின் அதிகபட்ச வயது வித்தியாசம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இருவருமே இப்போட்டியில், இறுதிச்சுற்றுக்கு முந்தைய அனைத்து சுற்றுகளிலும் மொத்தமாகவே 2 செற்களை மட்டுமே இழந்திருந்தனர். அத்துடன், ஆடுகளத்தில் அவர்கள் களமாடிய கால அளவும் ஏறத்தாழ சமமாகவே இருந்தது.

இந்நிலையில், பரபரப்பான இறுதிப் போட்டியில் 1-6, 7-6, 6-1, 3-6, 6-4 என்ற செற் கணக்கில் ஜொகோவிச்சை வீழ்த்தி முதல்முறையாக சம்பியனானார் அல்கராஸ். (ஐ)

# தொடரை தக்கவைத்தது அவுஸ்திரேலிய அணி!

சௌதாம்ப்டன், ஜுலை 18

நேற்று நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஆஷஷ் ஒருநாள் போட்டி தொடரை அவுஸ்திரேலிய அணி 1-1 என்ற கணக்கில் தக்கவைத்துள்ளது.

அவுஸ்திரேலியா மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. ஆண்கள் அணியைப் போலவே பெண்கள் அணிகளுக்கு இடையேயும் ஆஷஷ் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணியும் இருபது - 20 தொடரை இங்கிலாந்து அணியும் கைப்பற்றின. அடுத்து இந்த இரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டி தொடர் நடைபெறுகிறது. இதில் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரபரப்பான 2-வது போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 282 ஓட்டங்கள் குவித்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக எல்லிஸ் பெர்ரி 91 ஓட்டங்கள் குவித்தார். இங்கிலாந்து அணி தரப்பில் லாரன் பெல், எக்லெஸ்டோன் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 283 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி



என்ற இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து அணி இலக்கை நெருங்கி வந்து தோல்வியை தழுவியது. கடைசி ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், அந்த ஓவரை வீசிய ஜோனாசென் 11 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

50 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி 279 ஓட்டங்கள் எடுத்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இங்கிலாந்து அணி தரப்பில் ஸ்கிவர் பிரண்ட் சதமடித்து அணி வெற்றி பெற போராடினார். அவர் 99 பந்துகளில் 111 ஓட்டங்கள் குவித்தார். அவுஸ்திரேலிய அணி தரப்பில் ஆஷ்லே கார்ட்னர், அலனா கிங் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். 3 முக்கிய விக்கெட்கள் வீழ்த்திய அலனா கிங் ஆட்டநாயகியாக தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஆஷஷ் ஒருநாள் தொடரை 1-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி தக்கவைத்துள்ளது.

# சிறந்த வீரரிடம் தோற்றுள்ளேன்

## அனுபவ வீரர் ஜொகோவிச்



லண்டன், ஜுலை 18

எனது ரென்னிஸ் வாழ்க்கையில் பல அற்புதமான போட்டிகளை விளையாடி உள்ளதற்கு நான் ஆசிர்வதிக்கப்பட்டவனாக உணர்கிறேன். நான் சிறந்த வீரரிடம் தான் தோல்வியுற்றுள்ளேன். அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். நான் அடுத்தப் போட்டிக்கு இன்னும் வலுவாக தயாராக வேண்டும் - என்று கூறியிருக்கிறார் ரென்னிஸ் ஜாம்பவான் ஜொகோவிச்.

கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் இறுதிப் போட்டியில், சேர்பியாவின் நோவக் ஜொகோவிச்சை வீழ்த்தி ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் முதன்முறையாக பட்டம் வென்றார். தோல்வியின் பின்னர் அவர் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். கார்லோஸையும் அவரின் அணியினரையும் நான் பாராட்டுகிறேன். இறுதிக் கட்டத்தில் அருமையாக விளையாடினார் கார்லோஸ். கார்லோஸுக்கு பொருத்த மான வெற்றி.

என்னைப் பொறுத்தவரை இதுமாதிரி தோற்க விரும்பமாட்டேன். இந்த ஆடுகளத்தில் பல போட்டிகளில் த்ரில் வெற்றி பெற்றுள்ளேன். சில போட்டிகளில் தோல்விகளும். இங்கு நான் தோல்வியடைந்திருக்க வேண்டிய சில இறுதிப் போட்டிகளில் வென்றது போல தற்போது தோற்பதும்தான் சமநிலையாக இருக்குமென நினைக்கிறேன்.

எனது தோல்விக்குப் பிறகும் எனது மகன் சிரிப்புடன் இங்கிருப்பது பார்க்க அழகாக இருக்கிறது. எனக்கு ஆதரவளித்தமைக்கு எனது குடும்பத்துக்குப் பெரிய அன்பும் அரவணைப்பும். ஒருவரையொருவர் காதலிப்போம் - என்றார். (ஐ)

# ஆஷஷ் நான்காவது போட்டி; இங்கிலாந்து அணி அறிவிப்பு

மன்செஸ்டர், ஜுலை 18

நடப்பு ஆஷஷ் தொடரின் 4ஆவது டெஸ்ட் போட்டி வரும் நாளை மன்செஸ்டரில் தொடங்குகிறது. இந்தப் போட்டியில் ஆடும் பதினொருவர் அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதுவரை 3 போட்டிகள் முடிந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையில், இரு அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி நாளை மன்செஸ்டரில் தொடங்குகிறது. இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணியின் ஆடும் பதினொருவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி விவரம்:

பென் டக்கட், ஜேக் க்ராவ்லி, மொயின் அலி, ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (அணித்தலைவர்), பெயர்ஸ்ரோ (விக்கெட் காப்பாளர்), கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட், ஸ்ருவர்ட் பிராட், ஜேம்ஸ் அண்டர்சன்.

# சூழ்ச்சிகளால் அரசை கவிழ்க்க எதிரணி முயற்சிப்பது வெட்கம்!

## கூறுகின்றார் ஷாந்த பண்டார

கொழும்பு, ஜூலை 18

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வெற்றியை சகித்துக் கொள்ளமுடியாத எதிர்க்கட்சி, சூழ்ச்சிகள் மூலம் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இது வெட்கக் கேடான விடயமாகும். இதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார தெரிவித்தார்.**

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால், ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் ஆளுங்கட்சி பாராளுமன்ற குழு கூட்டத்தில் கலந்துரையாடி அதனை எதிர்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் வரிசைகளில் காத்திருந்து , சில சந்தர்ப்பங்களில் உயிரைக் கூட இழக்கவேண்டிய நிலைமையிலேயே கடந்த ஆண்டு நாடு காணப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்தரப்பினர் எவரும் ஏற்கவில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்து அந்த சவாலை ஏற்று இன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளார்.

இதனை சகித்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சி இன்று நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறது.

அதற்காகவே ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் , தொழிற்சங்கத்தினருக்கும் அழைப்பு விடுகின்றது.

இது வெட்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். எவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது. அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம்.

சுதந்திர கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு எனக்கு அழைப்பு விடுக்கவில்லை. ஏனைய 8 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு ஆதரவளித்தமைக்கான காரணத்தைக் கூட என்னிடம் கேட்காமல் என்னை கட்சியிலிருந்து நீக்கினர். அது மிகவும் தவறாகும்.

எனவே மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டாலும், எனக்கு சு.க.வுடன் இணைந்து பயணிக்கும் எண்ணம் இல்லை. இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் பொதுஜன பெரமுன சார்பிலேயே போட்டியிடுவேன்.



சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், அது தொடர்பில் சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டால் ஜனாதிபதி , பிரதமர் தலைமையில் ஆளுங்கட்சி பாராளுமன்ற குழு கூட்டத்தில் கலந்துரையாடி அதனை எதிர்கொள்வோம்- என்றார். (அ)

# இஞ்சி விலை உயர்வு

கொழும்பு, ஜூலை 18

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ இஞ்சி ரூபாய் 1100 முதல் ரூபாய் 1200 வரையில் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது ஒரு கிலோ இஞ்சியின் சில்லறை விலை 2400 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இஞ்சியின் விளைச்சல் குறைந்ததால் இஞ்சியின் விலை உயர்ந்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். (அ)

# சுகாதார அமைச்சராக ராஜித?

கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மீண்டும் சுகாதார அமைச்சராக நியமிக்கப்படக்கூடும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றது.

இதற்கிடையில் கெஹலிய ரம்புக்வெல பதவி விலகக்கூடும் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.



இவ்வாறானதொரு பின்புலத்திலேயே கெஹலிய பதவி விலகினாலோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவி விலக்கப்பட்டாலோ புதிய சுகாதார அமைச்சராக ராஜித நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (அ)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஓக. 1 முதல் விசேட ரயில் சேவை

கொழும்பு, ஜூலை 18

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கல்கிசையிலிருந்து காங்கேசன்துறைக்கு விசேட ரயில் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ரயில் சுமார் மூன்று வாரங்களுக்கு இயக்கப்படும் என்றும், பொதுமக்களின் தேவையைப் பொறுத்து இந்தச் சேவை தொடரலாம் என்றும் ரயில்வே செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு நோக்கிச் செல்லும் ரயிலில் 10 குளிரூட்டப்பட்ட பெட்டிகள் தொலைக்காட்சி வசதிகளுடன் இருக்கும். 4 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

ரயில்வே இணையத்தளத்தின் ஊடாக முன்பதிவு செய்யலாம். பயணிகளுக்கு உணவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வழிபாட்டு உரிமை மறுப்புக்கு எதிராக அணிதிரளவேண்டும்!

## சைவ மகா சபை வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 18

குருந்தூர்மலை ஆதி சிவன் வழிபாடுகள் தடுக்கப்பட்டமை தொடர்பாகவும், நீதிமன்றக் கட்டளையைப் பிக்குகளுடன் இணைந்து பொலிஸார் உதாசீனம் செய்தமைக்கு எதிராகவும் ஒட்டுமொத்தத் தமிழர்களும், சைவர்களும் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமென அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் வலியுறுத்தினார்.

குருந்தூர் ஆதி சிவன் மலையில் வழிபாடுகளுக்கு அரச இயந்திரத்தாலும், மாற்று மதத்தவர்களாலும் மிக மிலேச்சத்தனமான முறையில் இடையூறு விளைவிக்கப்படுவது, பொங்கல் பானை உட்பட சைவ வழிபாடுகள் பொலிஸாராலேயே மிதித்து மானபங்கப்படுத்தப்படுவது நிறுத்தப்படும் வரை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணிக்கத் தமிழ்ச் சைவ அமைப்புக்கள் கோர வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (அ)

### யாழ். தேவி ரயில் சேவை:

# 2 வாரங்களுக்கு ஆசனம் முழுமையாக முற்பதிவு!

கொழும்பு, ஜூலை 18

கொழும்பு-கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் யாழ். தேவி ரயிலில், அடுத்த இரண்டு வாரங்களுக்கு ஆசனங்கள் முழுமையாக முன்பதிவு செய்யப்பட்டு விட்டதாக இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் குணசிங்க தெரிவித்துள்ளார்.

மாஹோ-ஓமந்தை இடையிலான வடக்கு ரயில் பாதையின் 128 கிலோமீற்றர் பகுதியில், தரமேம்படுத்தல் பணி முடிவடைந்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் வடக்குக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது, கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயண நேரம் ஒன்றரை மணிநேரம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் குணசிங்க மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கல்கிசையிலிருந்து காங்கேசன்துறைக்கு விசேட ரயில் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ரயில் சுமார் மூன்று வாரங்களுக்கு இயக்கப்படும் என்றும், பொதுமக்களின் தேவையைப் பொறுத்து இந்தச் சேவை தொடரலாம் என்றும் ரயில்வே செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு நோக்கிச் செல்லும் ரயிலில் 10 குளிரூட்டப்பட்ட பெட்டிகள் தொலைக்காட்சி வசதிகளுடன் இருக்கும். 4 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

ரயில்வே இணையத்தளத்தின் ஊடாக முன்பதிவு செய்யலாம். பயணிகளுக்கு உணவும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குழு மோதலில் காயமடைந்த இரு தரப்பும் வைத்தியசாலைக்கு உள்ளேயும் மோதல்!

## ஒருவர் குத்திக்கொலை!!

கொழும்பு, ஜூலை 18

குழு மோதலில் காயமடைந்த இருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அங்கு ஒருவரையொருவர் கண்டதும் மீண்டும் மோதலில் ஈடுபட்டதில் ஒருவர் உயிரிழந்தார்.

அவசர நோயாளர் காவு வண்டியில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர், கொலையை செய்துவிட்டு தப்பியோடி விட்டார்.

கலவானை வைத்தியசாலையில் நேற்று முன் தினம் இரவு இந்த சம்பவம் நடந்தது.

கலவானை கொலனியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கலவானை கொலனியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த நபர் 1990 அவசர நோயாளர் காவு வண்டி சேவையின் மூலம் கலவானை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

மோதலில் ஈடுபட்ட மற்றைய தரப்பில் காயமடைந்த ஒருவரும் சிகிச்சைக்காக தனது மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு வந்தார்.

அப்போது, 1990 அவசர நோயாளர் காவு வண்டியில் கொண்டு வரப்பட்ட காயமடைந்த நபரை கண்டுள்ளார். ஆத்திரம் மிகுதியில், மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய கத்தியை உருவி, காயமடைந்தவரை குத்த முயன்றார்.

எனினும், நோயாளர் காவு வண்டியில் வந்தவரின் சகோதரி தலையிட்டு, தாக்குதலை தடுக்க முயன்றார்.

மூன்று முறை கத்திக்குத்து தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டபோதும், காயமடைந்தவரின் சகோதரி தடுத்து விட்டார். இதில் சகோதரியும் காயமடைந்தார்.

நோயாளர் காவு வண்டியில் வைத்தியசாலைக்கு வந்தவர் எழுந்து, தாக்குதல் நடத்தியவரிடமிருந்து கத்தியை பறித்தார். கத்தியை பறி கொடுத்தவர் வைத்தியசாலைக்குள் தப்பியோடினார். அவரை விரட்டிச் சென்று, நோயாளர் விடுதிக்குள் வைத்து குத்திக் கொன்றார்.

பின்னர், காயமடைந்த நபர் மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றார். (அ)

## மாகாண...

அப்படியே வருமாறு,

“இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் சிவில் சமூக உறுப்பினர்களான நாம் பின்வரும் அக்கறைகளை தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

“இலங்கை மக்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகளை தணிப்பதற்கு பெரிதும் தேவைப்பட்ட நிதி மற்றும் அத்தியாவசிய உதவிகளை வழங்குவதில் இந்திய அரசாங்கம் கடந்த 16 மாதங்களாக வெளிக்காட்டிய பேரளவு ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்புகளை மீளக்கட்டியெழுப்புவதிலும் யாழ்ப்பாணம் - கொழும்பு புகையிரதப் பாதை, பலாலி - சென்னை விமான சேவை மற்றும் உத்தேச தமிழ்நாடு - யாழ்ப்பாணம் கப்பல் சேவை போன்ற ஏனைய பயணத் திட்டங்களை ஏற்பாடு செய்வதிலும் உங்கள் அரசாங்கம் வழங்கிய பெருந்தன்மையான ஆதரவுக்கு நாம் நன்றியுடையோம்.

“முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் பல முதலீட்டு செயல்திட்டங்களுடன் சேர்த்து இந்தத் திட்டங்கள் எல்லாம் முடக்கநிலையில் உள்ள தமிழ் மாகாணங்களின் பொருளாதாரத்தை ஏனைய மாகாணங்களுடன் சேர்த்து மீள்விருத்தி செய்யவும் அவசியமாகத் தேவைப்படும் தொழில்வாய்ப்புகளை பெருக்கவும் நிச்சயம் உதவும்.

“உள்நாட்டு போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், எமது மக்களின் சமூக, பொரு ளாதார நிலவரங்கள் எதிர்பார்க்கப்பட் டதைப் போன்று மேம்பாட்டைக் காணவில்லை. தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் விளைவாக சகல இலங்கை மக்களும் எதிர்நோக்குகின்ற இடர்பாடுகளுக்கு மேலதிகமாக தமிழ் மக்கள் கூடுதல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, தமிழ் மாகாணங்களில் கல்வித்தரம் விரைவாக வீழ்ச்சி கண்டு வருகிறது. பல்வேறு சாக்குப்போக்குகளின் பேரில் தமிழ் மாகாணங்களில் வளமான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதன் விளைவாக விவசாயத்துறையிலும் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றத்தையும் காணமுடியாமல் இருக்கிறது. மாகாண மட்டத்தில் சகல துறைகளையும் பயனுறுதியுடைய முறையில் திட்டமிட்டு, நெறிப்படுத்தி, நிர்வகிக்க மக்களால் எளிதில் அணுகக்கூடிய தமிழ் நிர்வாகம் ஒன்று அவசியமாக தேவைப்படுகிறது என்று பரந்தளவில் மக்களும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் முன்னணி உறுப்பினர்களும் உணருகிறார்கள்.

“தற்போதைய நிலையில் வடக்கு, கிழக்கில் மாகாண சபைகள் மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கு வகைசெய்வதன் மூலம் மாத்திரமே இதை சாத்தியமாக்க முடியும்.

எமது தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் வெறுமனே அரசியல் காரணங்களுக்காக ஐக்கியமின்றி இருப் பது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களை நிறைவேற செய்வதற்கு அர்த்த புஷ்டியான எந்தவொரு செயல்திட்டமும் இந்த தலைமைத்துவங்களிடம் இல்லை. ஆனால், பெரும்பான்மையான மக்கள் மாகாண மட்டத்திலான ஒரு தமிழ் நிர்வாகத்தை அவசரமாக வேண்டி நிற்கிறார்கள். போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய தேர்தல்களில் 2013 மாகாண சபை தேர்தலில் மாத்திரமே அதிகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாக்களிப்பில் பங்கேற்றார்கள் என்ற உண்மையின் மூலம் இது தெளிவாக வெளிக்காட்டப்பட்டது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தமிழ் மாகாணங்களில் மாகாண சபைகள் செயல்பட வைக்கப்பட வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் இடையறாது வலியுறுத்தி வருவதை நாம் முழுமையாக அறிவோம்.

இந்த நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வருகைதரும் தற்போதைய சந்தர்ப்பத்தில் மீண்டும் அழுத்தமாக வலியுறுத்தி விரைவாக மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறு கேட்கவேண்டும் என்று மிகுந்த சிரத்தையுடன் நாம் தங்களிடம் வேண்டிக்கொள்கிறோம்” - என்றுள்ளது. (ஐ)

## அனைத்து...

நேற்றைய தினம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய கட்சிகளுடனான சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் எம். பியுமான சி. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோவின் தலைவரும் எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவரும் எம். பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழரசு கட்சியின் பேச்சாளரும் எம். பியுமான எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்க பிரச்னைக்கு தீர்வு தருவார் என்று தாம் நம்பவில்லை என்றும் அவர் ஜனாதிபதியான பின்னர் அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை எனவும் தமிழ்த் தரப்பினர் தூதுவருக்கு சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இனப் பிரச்னைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவையானது. எவ்வாறாயினும், தற்போது கிடைத்துள்ள அதிகாரம் அற்றுப்போகக் கூடாது என்பதற்காக 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், குருந்தூர்மலை விவகாரம், தமிழரின் காணி அபகரிப்பு தொடர்பான பிரச்னைகளில் இலங்கைமீது சர்வதேச சமூகம் பிரயோகித்த அழுத்தம் போதாது என்று தமிழ்த் தரப்பினர் கூறினர்.

இதன்போது, அமெரிக்க தூதுவர், அனைத்து விடயங்களுக்கும் சர்வதேசம் தலையிட வேண்டும் என்று கூறாதீர்கள். சர்வதேச நாடுகளுக்கும் சில வரையறைகள் உண்டு என்ற சாரப்பட கூறினார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. உண்மை, நல்லிணக்கம், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை முயற்சி எடுத்துள்ள நிலையில், அதிகாரப்பகிர்வு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணிப் பிரச்னை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்னை, மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரணை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்களின் முக்கியத்துவம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ஐ)

## இரு குழுக்களின்...

களமிறக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அத்துடன், பொலிஸாரின் பாதுகாப்பும் தொடர்கிறது.

இதனிடையே, வீதிகளில் பயணிக்க முடியாதவாறு போத்தல்கள் உடைக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

மோதலுக்கான காரணம் குறித்து உடனடியாக தெரியவரவில்லை. (ஐ)

## ஆட்சி அதிகாரங்களை...

தமிழ் மக்களின் பாதுகாப்பு - அடையாளம் - இருப்பு ஆகியவை இந்தியாவின் தேசிய பாதுகாப்பிலிருந்து குறிப்பாக, அதன் தெற்கு அயல் நாடுகளில் இருந்து பிரிக்க முடியாதவை என்று நாம் உறுதியாக நம்புகிறோம். துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களின் பாதுகாப்பும் இந்தியாவின் பாதுகாப்பும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 36 வருடங்கள் கடந்தும் மழுப்பலாகவே உள்ளது என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவுக்கு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியப் பிரதமரை சந்தித்து கலந்துரையாடுகிறார். இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழருக்கான அதிகாரப் பகிர்வு குறித்து வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்து தமிழரசு கட்சியின் பெரும் தலைவர் சம்பந்தன் இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதம் நேற்று திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. நீண்ட அந்தக் கடிதத்தில் பல விடயங்களை சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில், இலங்கை அரசு வாக்குறுதிகளை புறக்கணித்து விட்டது. காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தத் தவறிவிட்டது. பல சட்டங்களால் மாகாணங்களுக்கான அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன - தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது தேசிய பிரச்னைக்காக ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மீது நம்பிக்கை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் கூட்டாட்சி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசிய பிரச்னைக்கான அரசியல் தீர்வை முன்னோக்கி செயல்படுவதற்கான ஆணையை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எமக்கு வழங்கியுள்ளனர்.

இந்திய உடன்படிக்கை காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க வழிவகுத்தது. 40 ஆண்டுகளாக இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன் தமிழ் பேசும் மக்கள் கண்ணியமாகவும் - சுயமாகவும் வாழவேண்டும் என்ற நியாயமான மற்றும் நீடித்த தீர்வைக் காண்பதில் இந்தியா வெளிப்படுத்திய உறுதியான உறுதிப்பாட்டுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

மரியாதை - அமைதி மற்றும் பாதுகாப்பு எங்களின் நியாயமான அபிலாசைகளை அங்கீகரிக்கும் கூட்டாட்சி அடிப்படையான அரசியல் தீர்வுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் எப்போதும் பெரும்பான்மையாக உள்ளனர். 13ஆவது திருத்தம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் மாகாண சபை அமைப்பை நிறுவியது. ஆனால், அதிகாரப் பகிர்வுக்கு பதில் அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்தும் ஒற்றையாட்சி அரசமைப்பில் ,து அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் நான் எனது தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியிடம் குறைபாடுகளை சுட்டிக்காட்டினோம்.

இதனால்தான் 13ஐ மிஞ்சும் வகையில் ஒவ்வொரு முறையும் நகர்வை முன்னெடுத்தோம் என்று குறிப்பிட்டுள்ள அவர் பின்னர் இலங்கை அரசாங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் - எட்டப்பட்ட உடன்பாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 13ஆவது திருத்தம் நல்லிணக்கத்துக்கு தேவையான நிலைமைகளை உருவாக்கவே பங்களிக்கும். இது குறித்து 2012இலும் வலியுறுத்தப்பட்டது. 2015 மார்ச் 13 இலங்கை வந்த இந்திய பிரதமரான நீங்கள் கூட்டு கூட்டாட்சியை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தீர்கள்.

தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இந்தியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்த வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். (ஐ)

## தமிழர்...

கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விவரண அறிக்கையையும் சிறீதரன் எம். பி. கனடா உயர்ஸ்தானிகரிடம் கையளித்தார்.

(தொடர்புடைய செய்தி பக்கம் 3இல்)

## ஜனநாயகத்தை...

மீறல் என்ற தொனிப் பொருளில் அரசாங்கம், நீதிமன்றத்துக்கும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கை களை எதிர்ப்போம்.

அத்துடன், நீதித்துறையின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க இடமளிக்க மாட்டோம். சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற தேர்தல் ஆணைக்குழு மீது செல்வாக்கு செலுத்த இடமளிக்க மாட்டோம்.

சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றாக இணைத்துக் கொண்டு 220 இலட்சம் மக்களின் நலனுக்காக நீதித்துறையின் சுதந்திரத்தையும் தேர்தல் ஆணைக் குழுவின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வலுப்படுத்த செயல்படுவோம். ஜனநாயகத்தை அழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் கூட்டுச்சதி முயற்சிகளை முறியடிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்” -என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

தங்களின் நிலைப்பாட்டை குறிப்பிடுகின்றன. எந்த தேர்தலையும் எதிர்கொள்ள நாங் கள் தயாராக உள்ளோம். ஆகவே, தேர் தலை வெகுவிரைவில் நடத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

அரசியல் கட்சிகளுக்குள் மாறுபட்ட பல கருத்துகள் தோற்றம் பெற்றுள்ளன. அரசாங்கத்துடன் இருப்போம் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். எதிர்க்கட்சிக்கு செல்வோம் என பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

அனைத்து அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடு காணப்படுகிறது. கட்சித் தலைவர் ஒருபுறம் உறுப்பினர்கள் மறுபுறம் என்ற நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஓர் ஆசனத்துடன் பாராளுமன்றத்துக்கு வந்த அரசியல் கட்சி அடுத்த தேர்தலில் ஆசனங்களை அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய லிபரல் வாத கொள்கை நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுடையதாக அமைய வேண்டும்.

மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி மறுசீரமைப்புக்களை செய்வதால் முன்னேற்றமடைய முடியாது. ஆகவே, மறுசீரமைப்புகள் மக்களுக்கு சாதகமாக அமைய வேண்டும்.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த புதிய செயல்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இறக்குமதியை மாத்திரம் நம்பியிருந்தால் இன்னும் ஓரிரு வருடங்களுக்கு பின்னர் மீண்டும் வங்குரோத்து நிலையடைய நேரிடும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கான கடன் சீரமைப்பு விரைவில் நிறைவடையக்கூடும்!

## அமெரிக்க திறைசேரிச் செயலாளர்



**நியூயோர்க், ஜூலை 18**

**இலங்கை மற்றும் கானாவுக்கான கடன் மறுசீரமைப்பு விரைவில் நிறைவடையக்கூடும் என தாம் நம்புவதாக அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்தார்.**

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பாய்வுகளை சரியான முறையில் இலங்கை மற்றும் கானாவுக்கு முன்னெடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஆரம்பமாகியுள்ள, ஜி-20 உச்சி மாநாட்டுக்கு முன்னதாக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை கூறினார்.

கடன்களை பெற்றுக்கொண்ட நாடுகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு செயல்முறை பற்றிய தெளிவை வழங்க, கடன் மறுசீரமைப்பு பயனர் வழிகாட்டி அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு பூச்சிய வட்டிக் கடன்களை வழங்குவதாகவும் அது உறுதியான நிதி நிலைப்பாட்டில் வைக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட பல நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்க சர்வதேச நாணய நிதியம் உதவவேண்டும் எனவும் அவற்றுக்கு உதவ அமெரிக்க திறைசேரி தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சாணக்கியன் மீது தாக்குதல் முயற்சி!



*மட்டக்களப்பு, ஜூலை 18*

தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆரையம்பதி வட்டாரத் தலைவர் ஒருவர் தாக்குவதற்கு முற்பட்டுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அண்மையில் மன்னம்பிட்டி பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தின்போது 11 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவும் மட்டக்களப்பில் இயங்கி வரும் பஸ் உரிமையாளர்கள், சாரதிகளின் பிரச்னை தொடர்பாகவும் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இன்றி 10 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் இதன் பின்னால் அரசியல் செல்வாக்கு இருப்பதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது சட்ட விரோதமான முறையில் இயங்கி வரும் பஸ்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும், கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகாரியின் அசமந்த செயற்பாட்டின் காரணமாக இன்று 11 உயிர்கள் இழக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் கருத்து தெரிவித்துக்கொண்டிருந்தபோது உள்நுழைந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை தாக்குவதற்கு முற்பட்டனர். இதன்போது போராட்டக்காரர்களால் அவர்கள் பிடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். (அ)

# வடக்கு மாகாண கல்வி அமைச்சில் ஆடிப்பிறப்பு விழா கொண்டாட்டம்





*யாழ்ப்பாணம், ஜூலை 18*

வடக்கு மாகாண கல்வி அமைச்சில் ஆடிப்பிறப்பு விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சனின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆடிப்பிறப்பு விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது

ஆடி கூழ் காய்ச்சும் நிகழ்வோடு செம்மணி வீதியில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் இடம் பெற்ற ஆடிப்பிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிரு முருகன் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், கல்வித் திணைகள் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் பரிசல்களும் வழங்கப்பட்டன.

கலந்து கொண்டோருக்கு ஆடிக் கூழ் மற்றும் கொழுக்கட்டை என்பன வழங்கப்பட்டன. (அ)

# கோதுமை மா தட்டுப்பாடு?

*கொழும்பு, ஜூலை 18*

கோதுமை மா இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்படாவிட்டால், இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா 02 வார காலத்திற்கு மட்டுமே போதுமானது என தெரிவிக்கப்படுகின்றன.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுடன் பல தடவைகள் கலந்துரையாடியபோதிலும் கோதுமை மா இறக்குமதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# குருந்தூரில் முறுகலையே தடுத்தனர் பொலிஸார்!

## கூறுகிறார் அமைச்சர் டிரான் அலஸ்



*கொழும்பு, ஜூலை 18*

“தமிழ் மக்களுக்கும் சிங்கள - பௌத்தர்களுக்கும் இடையில் குருந்தூர்மலையில் ஏற்படவிருந்த முறுகலையே பொலிஸார் தடுத்தனர். பொலிஸார் மீது வீணாகக் குற்றம் சுமத்த வேண்டாம். தமிழ் மக்களில் ஒரு தரப்பினரே பொலிஸாருடன் வலிந்து மோதினர்.”

-இவ்வாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியாது. குருந்தூர் மலையில் இரு தரப்பினருக்கும் இடையில் குழப்பம் ஏற்படக் கூடிய நிலைமை இருந்தது. அதை அமைதி வழிப்படுத்தவே பொங்கல் விழாவைச் செய்ய வேண்டாம் என்று பொலிஸார் தடுத்ததுடன் அங்கு வழிபட்டுச் செல்லுமாறு பொலிஸாரும், தொல்பொருள் திணைக்களத்தினரும் கூறினர். அதற்கு இணங்க தமிழ் மக்கள் செயற்பட்டனர்.

அங்கு வழிபடவந்த பௌத்தர்களும் வழிபாட்டுக் கடமைகளை முடித்துவிட்டு அமைதியாகச் சென்றனர். தமிழ் மக்களுடன் சென்ற ஒரு குழுவினர் வலிந்து பொலிஸாருடன் முட்டி மோதினர். காணொளியைப் பார்க்கத் தெளிவாகத் இது தெரிகின்றது.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது பொலிஸாரின் கடமை. அதை வன்முறை வழியில் தடுப்பதற்கு தமிழ் மக்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை. எனினும், குருந்தூர்மலைச் சம்பவம் தொடர்பில் விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளேன்- என்றார். (அ)

# 2027 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேச ஆதரவு தேவைப்படாது

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

*கொழும்பு, ஜூலை 18*

2027ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தேவைப்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளை தெளிவூட்டுவதற்காக இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு முன், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுள்ள நாடாக இலங்கை முன்மாதிரியாக திகழ்வதாக நிதி இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

# ரூபாவின் பெறுமதி கடுமையான வீழ்ச்சி

*கொழும்பு, ஜூலை 18*

இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று பாரியளவில் வீழ்ச்சி கண்டது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய பெறுமதி குறித்த அறிவிப்பில், டொலரின் கொள்வனவு விலை 313.29 ரூபாவாகவும் விற்பனை விலை 327.16 ரூபாவாகவும் காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை டொலரின் கொள்வனவு விலை 310.49 ரூபாவாகவும் விற்பனை விலை 324.67 ரூபாவாகவும் காணப்பட்டது.

என்றாலும், தனியார் வங்கிகள் வெளியிட்டுள்ள அறி விப்பில் 330 ரூபாவுக்கும் அதிகமாகவே டொலர் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த மாத ஆரம்பத்தில் டொலரின் பெறுமதி 285 ரூபா வரை வீழ்ச்சிக்கண்டிருந்ததால் ரூபாயின் பெறுமதி பாரியளவில் அதிகரித்திருந்தது.

என்றாலும், மீண்டும் டொலரின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் ரூபாவின் பெறுமதி குறைவடைந்து வருகிறது. இந்த அதிகரிப்பு பொருட்களின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென வர்த்தகர்கள் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.